990

விரோதி ஸூ
வைகாசி மீ

ஸம்புடம் 8
ஸஞ்சிகை 5

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

May 1949
Vol. 8 No. 5

JL
189258

விஷய ஸூசிகை

		பக்கம்
1	ஸ்ரீ அழகியசிங்கரின் வைராக்யமும் சாஸ்த்ர வச்யதையும்	126
2	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	130
3	நாதன் நாண்மங்கலம்	133
4	தறிதலை	137
5	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்	141
6	திருப்பாவை	143
7	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	149
8	செய்திகள்	150
9	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	153

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு

[21-3-49—20-4-49]

		ரூ.
99	ஸ்ரீ R. ஸந்தானம் ஐயங்கார், தி. நகர், சென்னை (49)	3
134	,, A. V. கோபாலாசாரியர், அட்வொகேட், திருச்சி 49	3
135	,, T. மாணிக்க நாயகர், செவ்வாய்பேட், சேலம் (49)	3
161	,, S. திருவேங்கடாசார்யர், A. I. R. எழும்பூர் (49)	3
170	,, T. தோதாத்ரி ஐயங்கார், தெப்பக்குளம், திருச்சி (49)	3
184	,, M. B. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம் (47-48, 49)....	7
222	,, K. குப்புஸாமி ஐயங்கார், ஆடுதுறை (49)	3
252	,, கடாம்பி. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர், கோவில்வெண்ணி (49)	3
255	,, S. ஸம்பத், கோவில்வெண்ணி (49)	3
387	,, D. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வொகெட், வேப்பேரி (49, 50)	6
448	,, S. ஆழ்வார் ஐயங்கார், திருநெல்வேலி (49)	3
451	,, K. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சேஷபுரம், தென்னூர், திருச்சி (49)	3
464	,, A. வெங்கடாசார்யர், நாகப்பூர் (49)	3
578	,, K. V. பாஷ்யம் அய்யங்கார், ஜி. டி. மதராஸ் (49)	3
699	,, P. T. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர், சென்னை (49)	3
711	,, S. A. ஸ்ரீநிவாஸன், மல்லாபுரம், பொப்மிடி (48)	3
717	,, S. N. ஸ்ரீநிவாஸ ஐயர், Marine Drive, பம்பாய் (49)	3
750	,, A. ரங்காசார்யர், காளிகட், கல்கத்தா (48, 49)	6
755	,, G. K. ராமஸ்வாமி, புது டெல்லி (49)	3
766	,, K. A, ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கோனேரிராஜபுரம் (49)	3
796	,, D. P. தாதாசார்யர், ப்ளீடர், கள்ளக்குரிச்சி (49)	3
811	,, K. N. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திருப்பத்தூர் (49)	3
836	,, K. துரைஸாமி ஐயங்கார், தி. நகர், சென்னை (49)	3
	மொத்தம் ரூ.	79

MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8 | விரோதி ௵ வைகாசி ௴ | ஸஞ்சிகை 5

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாயுக்தா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய ந்ருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ருகஸிம்ஹனுடையகடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ அழகியசிங்கரின் வைராக்யமும் சாஸ்த்ர வச்யதையும்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

முற்காலத்தில் தேவகுருவான ப்ருஹஸ்பதியின் அம்ஸமாக ஜநித்தவரும், பரத்வாஜ மஹர்ஷியின் புத்ரரும், அயோநிஜரும், பரசுராமரது சிஷ்யரும், சீல வ்ருத்தாதிகளாலே 'த்ரோணோ நஹ்யதா ஹி மஹா நாஸ்மாகம்' என்கிறபடி மஹா மஹிமோபேதாசார்யரென்று ப்ரஸித்தி பெற்றவரும்,

"த்ரோணஸ்த்வயோநிஜோ ஜாதோ நக்ஷத்ரவம்ஶவிஶ்ருத: ।
விஷ்ணோர்யோகாத்ஸம்ஹாதம் ப்ராப்தம் ப்ரஜ்ஞயா ஸ்திதம் ப்ரபோ ॥
கவசஸ்யாஸ்ய திவ்யம் ஸ்வர் ப்ராப்தவம் தம் மஹாமதிம் ।"

என்கிறபடியே பக்தியோக ப்ரபாவத்தினாலே மோக்ஷம் பெற்றவருமான த்ரோணாசார்யர், தாரித்ர்யத்தினால் குடும்ப ரக்ஷண விஷயத்தில் கஷ்டப்பட்ட காலத்திலும், நமன்தமர் செய்யும் வேதனைக்கு ஒடுங்கி நடுங்கிய நெஞ்சுடையராய்,

"கவி ஆஹம் வாச விப்ரேஷு ஜீவதோ ப்ரதிக்ருஹதோ வஹே ।
வநேவஸேவாம் வாவிஷ்டாம் ந து கார்யம் யதிநவ்யயா ॥"

என்று அர்த்தத்தில் உள்ள ஆஸ்தையினால் 'ந ஶ்வவ்ருத்த்யா கதாசந' என்று ப்ராஹ்மணனுக்கு ஶாஸ்த்ர நிஷித்தமான ஸேவக வ்ருத்தியை, மஹா பாபத்துக்கு அஞ்சிச் செய்யமாட்டாமல் அதை அநாதரித்திருந்தார். பிறகு த்ருபத ராஜன் செய்த பரிபவத்தை ப்ராஹ்மணரான த்ரோணாசார்யர்,

"ஸம்மாநாத் ப்ராஹ்மணோ நித்யமுத்விஜேத விஷாதிவ ।
அம்ருதஸ்யேவ சாகாங்க்ஷேதவமாநஸ்ய ஸர்வதா ॥"

என்கிறபடியே அம்ருத துல்யமாக ஆதரித்திருக்கவேண்டியதே உசிதமாக இருந்தும்,

"ப்ரதீதகாலோ ராஜேந்த்ர ஸ்வயம் ச வஸுநாயகை: ।
இதம் நாஸவாரம் ராஜ்யம் ப்ரஹி கிங்கரவாணி தே ॥

என்கிறபடியே தன்னை அநாதரித்துப் பேசின த்ருபத ராஜனை அவமாநப்படுத்த வேணுமென்கிற ஆசையினால் பீஷ்மரிடம் போய் ஸேவக வ்ருத்தியை ப்ரார்த்தித்ததோடு,

“ அர்த்தஸ்ய புருஷோ தாஸோ தாஸஸ்த்வர்த்தோ ந கஸ்யசித் ।
இதி ஸத்யம் மஹாராஜ பத்தோஸ்ம்யர்த்தேந கௌரவை: ॥ ”

என்கிற தன் வாக்யத்தின்படியே அர்த்தாஶா பராதீநராய், முன் பாபிஷ்டை யென்று அநாதரித்த ஸேவக வ்ருத்தியை பாபிஷ்ட ப்ரதாநனை துர்யோதந னிடம் ஆப்ராண வியோகம் அநுஷ்டித்து வந்தார் என்பது பாரத ப்ரஸித்தம்.

நம் அழகிய சிங்கரோ வென்றால்,

“ க்ருஷ்ணஸ்யாஸீத் ஸகா கஶ்சித் ப்ராஹ்மணோ ப்ரஹ்மவித்தம: ।
விரக்த இந்த்ரியார்த்தேஷு ப்ரஶாந்தாத்மா ஜிதேந்த்ரிய: ॥
யத்ருச்சயோபபந்நேந வர்த்தமாநோ க்ருஹாஶ்ரமீ ।
தஸ்ய பார்யா குசைலஸ்ய க்ஷுத்க்ஷாமா ச ததாவிதா ॥ ”

என்கிறபடியே ப்ரஹ்ம வித்தமத்வம் தொடங்கி ஆகிஞ்சந்ய பர்யுந்தமாக ஸர்வ விஷயங்களிலும் குசேல முனிக்கு அத்யந்த ஸமாநராக இருந்தும், ‘ பர்த்தவ்யா மநுரப்ரவீத் ’ என்று அவச்யம் செய்யவேண்டியதாக விதிக்கப் பட்ட குடும்ப ரக்ஷண விஷயத்தில், ‘ அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் ’ என்றும், ‘ சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறி யாவும் தெரிந்தவன் ’ என்னும்படி இருக்கிற தமக்கு, அக்காலத்தில் பற்பல பாடசாலைகளில் சாஸ்த்ராத்யாபந மூலகமான ஜீவநோபாயங்கள் ஸுலபங் களாக இருந்தும், அவைகள் ப்ராஹ்மணனுக்கு ‘ ந ஶ்வவ்ருத்த்யா கதாசந ’ என்று நிஷேதிக்கப்பட்டவைக ளாதலாலே சாஸ்த்ரத்தில் பீஷ்ம துல்ய விச்வாஸத்தினாலே அந்த ஜீவநோபாயத்தில் நிவ்ருத்தராய்,

“ ஷண்ணாம் து கர்மணாமஸ்ய த்ரீணி கர்மாணி ஜீவிகா ।
யாஜநாத்யாபநே சைவ விஶுத்தாச்ச ப்ரதிக்ரஹ: ॥ ”

என்று மநுவினால் ப்ராஹ்மணனுக்கு ஜீவநோபாயமாக விதிக்கப்பட்ட யாஜநம அத்யாபநம் ப்ரதிக்ரஹம் என்கிற மூன்றுக்குள்,

‘ விகர்ஹிதம் தர்மஶீலைர் ப்ரஹ்மவர்ச்ச உபவ்யயம் ’ என்றும்,
‘ கதம் விகர்ஹ்யம் நு கரோம்யதீஶ்வரா:
பௌரோதஸம் ஹ்ருஷ்யதி யேந துர்மதி: ’

என்றும் விச்வரூபனால் தூஷிக்கப்பட்ட யாஜந ஜீவநத்தில் தோஷ தர்சநத் தினாலே அதிலும் பராங்முகராய், முற்காலத்தில் ஜநக மஹாராஜனுக்கு வேதாந்தாத்யாபநம் பண்ணி வைத்த யாஜ்ஞவல்க்யருக்கு ஜநக மஹாராஜன் குருதக்ஷிணை ஸமர்ப்பித்தாற்போலே இக்கலியுகத்தில் அர்த்த ப்ரதாந மூலகமான ஆசார்ய கைங்கர்யம் செய்கிற சிஷ்யன் அத்யந்த துர்லபனாகையாலே அத்யா பந வ்ருத்திக்கு ப்ரஸக்தியே யில்லாததினால் அதில் இச்சை யில்லாதவராய்,

“ ப்ரதிக்ரஹஸமர்த்தோऽபி ப்ரஸங்கம் தத்ர வர்ஜயேத் ।
ப்ரதிக்ரஹேண ஹ்யஸ்யாஶு ப்ராஹ்மம் தேஜ: ப்ரஶாம்யதி ॥ ”

என்று மநுவினுலும், 'ஸூதிரு ஹம் உநயாநு ஷவஸெஜாயஸொநஒழ' என்று உத்தவ கீதையில் பகவானுல் தூஷிக்கப்பட்ட ப்ரதிக்ரஹ வ்ருத்தியில் அத்யந்த பீதராய், இக்கலியுகத்தில் ஶிஷ்டர்களான உதாரர்கள் இல்லாததனுலும்; மநுவினுல் உத்தம ஜீவநோபாயமாகச் சொல்லப்பட்ட ஸூஶவ்ருத்காஸுஷ வஅயாநு ஷம் ஹ ஹண ரூபமான ஸில வ்ருத்திக்கு ஆஸ்திகரல்லாத மநுஷ்யர்களுடைய ராஜ்யாதிபத்யத்தில் ப்ரஸக்தியில்லாததனுலும், 'அஜுதம் ஹூாதியாசிதழ' என்று அதற்கு அடுத்தபடியாகச் சொல்லப்பட்ட அயாசித ஸத்த்ரவ்யமாக மனத்திற்கும் இக்கலியுகத்தில் ப்ரஸக்தியில்லாததினுலும் அவைகளிலும் உதாஸீநராய்; 'யொமகெஷாயஉ ஶீஸு ரஉஹிமெஷு' என்று கௌதமரால் சொல்லப்பட்ட ஜீவநத்திற்கும் இக்காலத்தில், அங்கு ஈச்வர கச் சொல்லப்பட்ட தார்மிக க்ஷத்ரியர்கள் இல்லாததினுலும், மற்றும் இக்காலத்தில் ந்யாயார்ஜநமுள்ள தநிகோதாரர்கள் துர்லபர்களாகையினுலும், அந்த ஜீவநத்தை 'ஊதஷ யாவிதம் ஸொக்ஷம்' என்று மநு தூஷித்திருப்பதாலும், அந்த வ்ருத்தியிலும் அத்யந்த நிவ்ருத்தராய், மற்றும் 'ஸூஜுதம் கஷஉணம் ஷுரதழ' என்றும், 'ஸதயாநுதஷ வாணிஜழ' என்றும் சொல்லப்பட்ட ஜீவநோபாயங்கள் ப்ராஹ்மணனுக்கு ஆபத் கல்பமாகச் சொல்லப்பட்டவைகளோடு ப்ராணி ஹிம்ஸா அந்ருதப்ராயங்களாய் அதிஜுகுப்ஸிதங்களாய் அஶக்யங்களாகவும் இருப்பதாலும், அவைகள்,

> " நஹொகவுதும் வதெஉத வருதிஹெதொ: கயம் அ ந ।
> அஜிஹாஉஶாம் ஶஷாம் ஜீவெஉா ஹணஜீவிகாழ ॥
> அஹெ ாஹெஹணைவ ஹஉதா நாஉஷ ஊாஹெண வா வஷ ந: । "

என்கிற மநு வசந விருத்தங்களாகையாலும், அந்த ஜீவநோபாயங்களில் அத்யந்த பராங்முகராய், இப்படி தோஷமுள்ள உபாயங்களை விட்டு, வேறு தோஷமில்லாத உபாயங்களில் ப்ரவர்த்திக்கப் பார்த்தாலும் அர்த்தார்ஜநாதி விஷயத்தில்,

> " ஷெயம் ஹிம்ஸாஉநுதம் உஹ: காஉ: கூாயஹயொ உஹ: ।
> ஹெஹொ வெஉவிஸுாஸ ஷஸய ஊவுஹ நாமிஷ ॥
> ஷதெ வம் அஉஶா நய ஊ ஹுய உ உஅயா உதா நுணாழ ।
> தஹாஉ நயஉய ஊவதும் ஷெயொயீ உ உஅ தஹுஜெஷு ॥
> வஶாவி யமிநாம் ஷெயம் ஶு வா நாஉஜிதாக நாழ ।
> ஷயாஉஶுபநிஊாணாம் ஷவஉதொஉதிவிஶஹிநாழ ॥
> ராஜ தஸ்ரொ தஸுஹொ ஷஜநா தஶ வக்ஷிதஃ ।
> அயிஹுஃ காமுதஃ ஷஹாளிதும் ஸூணாய உ யொஹயழ "

என்று ஸ்ரீ பாகவத்திலும், 'பாஹ்யா: விஷயொவாஉ: வஅ' என்று ஸாங்க்ய க்ரந்தத்திலும் சொல்லப்படுகிற அர்த்தார்ஜந தோஷ ரக்ஷண தோஷ க்ஷய தோஷ போக தோஷ ஹிம்ஸா தோஷங்கள் ப்ரத்யக்ஷ ஸித்தங்களாகையினுல், 'நைவாதிஷீயஹெ விஉநுயநைஷ விதிதம் ஹிெ' என்கிறபடியே அந்த அர்த்தார்ஜநாதி தோஷங்களை நன்கறிந்திருக்கிற தமக்கு அவ்விஷயத்தில் ப்ரீதி

யில்லாமல், அதிக ச்ரமப்படாமல் தினந்தோறும் தேஹதாரணத்திற்கு அநுகூலமான ஶாஸ்த்ர ஸம்மதமான ஜீவநோபாயத்தில் திருவுள்ளத்தினாலே அப்படிப்பட்ட உபாயத்தை ஆலோசித்துப் பார்க்குமளவில், 'யத்வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்' என்று ப்ரஶம்ஸிக்கப்பட்ட மநுவினால் சொல்லப்பட்ட தர்ம ஶாஸ்த்ரத்தில்

" குஸூலதாந்யகோ வா ஸ்யாத் கும்பீதாந்யக ஏவ வா ।
த்ர்யைஹிகோ வாபி பவேத் அஶ்வஸ்தநிக ஏவ வா ॥ "

என்கிற ச்லோகத்தினால், " ப்ராஹ்மணன் மூன்று வர்ஷம் தன் குடும்ப போஷணத்துக்கு வேண்டிய தாந்யங்களோடு இருக்கலாம்; அல்லது: ஒரு வர்ஷம் தன் குடும்ப போஷணத்துக்கு வேண்டிய தாந்யங்களோடு இருக்கலாம்; அல்லது: மூன்று நாள் குடும்ப போஷணத்துக்கு வேண்டிய தாந்யங்களோடு இருக்கலாம்; அல்லது: மறுதினம் ஆஹாரத்துக்கு மிச்சமான தாந்யத்தை வைத்துக் கொள்ளாமல் தினந்தோறும் வேண்டிய வஸ்துக்களை மாத்ரம் ஸம்பாதித்துக் கொண்டிருக்கலாம் " என்று சொல்லிவிட்டு,

" சதுர்ணாமபி சைதேஷாம் த்விஜாநாம் க்ருஹமேதிநாம் ।
ஜ்யாயாந் பர: பரோ ஜ்ஞேய: தர்மதோ லோகஜித்தம: ॥ "

என்கிற அடுத்த ச்லோகத்தில், கீழ் ச்லோகத்தில் சொல்லப்பட்ட நான்கு க்ருஹஸ்தர்களுக்குள், மேலே சொல்லப்பட்டவன், கீழே சொல்லப்பட்டவனைக் காட்டிலும் உத்தமமான ஸ்வர்க்க லோகத்தை அடைகிறானென்று சொல்லியிருப்பதால், மறுதினம் ஆஹாரத்துக்கும் ஸம்பாதிக்காமல் அன்றன்று ஆஹாரத்துக்கு வேண்டிய பதார்த்தத்தை மாத்ரம் ஸம்பாதிக்குமவனே மற்றெல்லாரையும் காட்டிலும் தர்மத்தினால் உயர்ந்தவன் என்று முடிந்தாலும், அதற்கடுத்த ச்லோகத்தில் அந்த அச்வஸ்தநிகனை 'ப்ரஹ்மஸத்ரேண ஜீவதி' என்று கொண்டாடியிருப்பதாலும், அப்படிப்பட்ட ஜீவநத்திலேயே ஆஸ்தாதிஶயத்தினால் ஸிலம் உஞ்சம் என்று இரண்டு விதங்களான அவ்வுத்தம வ்ருத்திகளுக்குள், கீழே சொன்னபடியே ஸிலம் என்கிற வ்ருத்திக்கு இக்காலத்தில் அவகாஶமில்லாததனால் அதில் நிஸ்ப்ருஹராய், பரிஶிஷ்டையான உஞ்சவ்ருத்தியும் 'ருதமுஞ்சஶிலம் ஸ்ம்ருதம்' என்று முக்யமான ஜீவநோபாயமாகச் சொல்லப்பட்டதாய், த்ருணீக்ருத விரிஞ்சி வைபவர்களான ஸ்ரீநிகமாந்தாசார்யாதி பூர்வாசார்யோத்தமர்களாலே அது அம்ருத துல்யையாக ஆதரிக்கப்பட்டு, ஆதேஹவியோகம் அநுஷ்டிக்கப்பட்டதாயிருக்கிறபடியாலே அதையே பரமபாவநமான ஜீவநோபாய மென்று உகந்து அநுஷ்டித்தருளினார்.

இதனால் ஸ்ரீ அழகியசிங்கருடைய ஸ்ரீதேஶிகாதி துல்ய வைராக்யாதிஶயமும் சாஸ்த்ர விச்வாஸஶாலித்வமும் சொல்லப்பட்டதாகின்றன.

ஸ்ரீரங்கேஶயதீந்த்ராணாம் ஸத்குணாக்ருஷ்டசேதஸா ॥
ஸ்ரீநிவாஸாய்யவிதுஷா ஸத்கீர்த்திரியம் ஸமர்ப்பிதா ॥

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

———::———

மஹாமோஹன்.—[உரக்கச் சிரித்து] பேதைப் பெண்ணே! ஸ்வப்நத்தில் கூட நீ இப்படிப் பயநடுக்கப் பேச்சைப் பேசலாகாது. '𑌨𑌨𑍍𑌵𑌹𑌂 𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌃' [நான் மஹாமோஹ னல்லவா? நான் அல்ப மோஹனே?] [இந்த்ரஜித் யுத்தத்திற்கு வருகையில் வாநரப் படைகள் நடுங்குவதைப் பார்த்து, "அஞ்சாதேயுங்கள்; உங்களை நான் ஒன்றும் செய்யேன்; '𑌨𑌨𑍍𑌵𑌹𑌂 𑌮𑍇𑌘𑌨𑌾𑌦𑌃' நான் மேகநாத னல்லவா?" என்று உன்மத்த ராகவ நாடகத்தில் பேசியதை ஸ்வாமி இங்கு நினைவூட்டுகிறார்.] இந்த்ரஜித் மஹாமோஹன்; நான் யாரோ ஒரு ஸாமாந்யன் என்று நினைக்கிறாயா? பயந்த பெண்களுக்கு ராஜநீதி கௌரவ முறைகள் தெரியமாட்டா போலும். ப்ரியே! மஹாமோஹனுடைய வீர வ்ரதத்தைக் கேள்.

> " 𑌕𑍍𑌰𑌕𑌚𑍈𑌃 𑌕𑍃𑌤𑍍𑌤𑌦𑍇𑌹𑍋 𑌵𑌾 𑌦𑍀𑌪𑌿𑌤𑍋 𑌵𑌾 𑌦𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 ।
> 𑌨 𑌸𑍂𑌚𑍍𑌯𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨 𑌸𑌨𑍍𑌧𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 ॥ "

ஸமாதாந ப்ரஸ்தாவம் வருகையில், 'ஒருக்காலும் ஸம்மதிக்கமாட்டேன்' என்று பேசிய ராவணன் துர்யோதநன் ஆகிய இவர்களுடைய முரட்டுப் பிடிவாதப் பேச்சுக்கள் மஹாமோஹனுடைய இந்த ஒரு ச்லோகத்தில் அமைந்துள்ளன. அவ்விருவரும் மஹாமோஹ வடிவமானவர்களே. '[illegible]' என்று தகப்பனை க்ருதராஷ்ட்ரன் தன் பிள்ளையின் மோஹ ஸ்வரூபத்தைச் சொல்லி யழுதார். '𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌭𑌜𑍍𑌯𑍇𑌯𑌮𑌪𑍍𑌯𑍇𑌵𑌂 𑌨 𑌨𑌮𑍇𑌯𑌂 𑌹𑌿 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍' என்ற ராவணன் சபதப் பேச்சை இந்த ச்லோகம் முன்பாதி ஸூசிக்கிறது. பிராட்டி '𑌮𑌿𑌤𑍍𑌰𑌮𑍌𑌪𑌯𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂' என்று உபதேசித்தாள். மால்யவானும் அதுபோலவே '[illegible]' என்று கூறியதற்கு, 'க்ரகசங்களால் (ரம்பங்களால்) எனது உடலைப் பிளந்தாலும், என் உடம்பை உயிரோடு காட்டுத்தீயால் கொளுத்தினாலும், ஒரு ஊசிமுனை அளவு பூமிகூட நான் கொடுக்கவே மாட்டேன்; ஒருவரோடும் ஸமாதானம் செய்யவேமாட்டேன்' என்பது ராவணன் பதில். '𑌸𑍂𑌚𑍍𑌯𑌗𑍍𑌰𑌂 𑌨𑍈𑌵 𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿' என்று கண்ணனிடம் துர்யோதநன் கூறிய சபதத்தை '𑌨 𑌸𑍂𑌚𑍍𑌯𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿' என்பதால் ஸ்வாமி ஸூசிக்கிறார். இரண்டு இதிஹாஸங்களும் மஹாமோஹாவதாரர்களான ராவண துர்யோதநர்களைப் பற்றியவை. '𑌦𑍀𑌪𑌿𑌤𑍋 𑌵𑌾 𑌦𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾' என்பது, '𑌨 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌮𑌿 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵 𑌭𑌸𑍍𑌮 𑌭𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌹 𑌤𑍇𑌜𑌸𑌾' [பத்துக் கழுத்துக்களுடைய உன்னைச் சாம்பலாகக் கொளுத்தும் தேஜஸ்ஸு எனக்கு உண்டு] என்ற பிராட்டி சொல்லை ஸூசிக்கிறது.

நாரதர் :—(தம் மனத்திற்குள்) அக்ரமத்தை அடக்குவதற்காகக் கலஹங்களில் குதூஹலமுள்ள எனக்கு என் தவங்களெல்லாம் இப்பொழுது பலிக்கின்றனபோலும். மஹாமோஹன் பிடிக்கும் பிடிவாதம் ஶவத்தின் முஷ்டிப் பிடிபோல உறுதியாகிவிட்டது. [மஹாமோஹனுக்கு ஶவமாகும் தருணம் நெருங்கிவிட்டதென்று இதனால் ஸூசிக்கப்படுகிறது. உயிருள்ளவரையில் அவன் தன் பிடியை விடானென்று ரஸம்.] [உரக்க] அம்மா துர்மதிதேவி! உம் ப்ரியநாயகன் சிறந்த உறுதியைக் கொண்டிருக்கிறார். தூதனுடைய மிச்ச ஸந்தேஶ வார்த்தைகளையும் கேட்போம்.

தூதன் :—ஸமாதானத்திற்கு ஒப்பினால் உள்ளபடியே அவரவர்கள் ஸ்தானத்தில் இருவரும் நிலைகொள்வோம். சண்டை வேணுமென்றால்,

“ நிஷ்காமக்ரோதலோபோ நிவ்ருதகுஹநாதம்பதர்பாபிமாநம்
நிர்யாதேர்ஷ்யாஸூயாமதவிஹ்ருதிஜஹத்பரோத்கர்ஷாஸஹநஸ்தம்பஜாட்யம் ।
அத்ய ஶ்வோ வா விதத்யாத் கலியுகசரமே விஶ்வமக்ஷுண்ணஸத்வம்
வேலாதீதப்ரவ்ருத்தப்ரணயஜலதயா உத்தஸேகோ விவேக: ॥ ”

வேலாதீதப்ரவ்ருத்தப்ரணயஜலதயா—கரைகளை உடைத்துக்கொண்டு தடுக்க முடியாதபடி ஏகோதகமாய் ஓடிவரும் மதுஸூதனனுடைய தயா ஸமுத்ரத்தால்; உத்தஸேகோ விவேக:—நன்றாய் நீர் தெளித்து உயிர்த்து வளர்ந்த விவேகர்; விஶ்வம்—உலகத்தையே, கலியுகசரமே—கடைசி யுகமாகிய இக்கலியிலும்; நிஷ்காமக்ரோதலோபம்—காமம் கோபம் லோபம் ஆகிய கொடிய துர்க்குணங்கள் அற்றதாயும்; நிவ்ருதகுஹநாதம்பதர்பாபிமாநம்—குஹனை (வஞ்சனை), டம்பம், தர்ப்பம் (கர்வம்), அபிமானம் ஆகிய துர்குணங்கள் நீக்கப்பட்டதாயும்; நிர்யாதேர்ஷ்யாஸூயாமதவிஹ்ருதி—ஈர்ஷ்யை (பொறாமை), அஸூயை, மதம் (திமிர்) ஆகிய இவற்றின் நிலவுதல் தொலைக்கப்பட்டதாயும்; ஜஹத்பரோத்கர்ஷாஸஹநஸ்தம்பஜாட்யம்—பிறர் மினுக்கம் பொறாமை (பிறர் பெருமையை ஸஹியாமை என்னும் மத்ஸரம்), ஸ்தம்பம் (இறுமாப்பு), ஜாட்யம் (மதியின்மை) ஆகிய இவை நீங்கியதாயும்; அத்ய ஶ்வோ வா—இன்றோ நாளையோ; அக்ஷுண்ணஸத்வம்—ஸத்வகுணம் மெலியாமல் பெருகியிருக்கும்படி; விதத்யாத்—ஆக்கிவிடும்.

[இந்தத் துர்க்குணங்களெல்லாம் ஒவ்வொன்றாக விவேக பலத்தால் குன்றிக் குறைந்து அழிந்துவருவதை இதுவரையிலும் வர்ணித்து வந்தது இப்பொழுது ஒருமிக்கச் சேர்த்து இங்கு அநுவாதம் செய்யப்படுகிறது.] இந்த்ரியங்களும் மனமும் இத்துர்க்குணங்களுக்கு ஆச்ரயம். இவற்றை யெல்லாம் ஜயித்து இந்த்ரிய மனங்களை வசப்படுத்தப் பரமாத்மாவை வசப்படுத்த வேண்டும். ‘அவனை வஶப்படுத்த அவனையே அடைக்கலமாகப் பற்றி அவன் தயா ஸமுத்ரத்தின் கரையை உடைத்து நம்மீது வெள்ளமிடச் செய்யவேண்டும்’ என்று ஸ்ரீபாஷ்யம்.

“ தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர: ।
வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ ”

என்று கீதை. ‘இந்த்ரியங்களை வசப்படுத்தும் ப்ரயத்நத்தில்‘ மத்பர:’ என்னையே ஆச்ரயித்து என்னையே நினைந்துகொண்டிருக்க வேண்டும்; ‘விஶ்வ’ உலக முழுவதையும் ஸத்வமய மாக்கி முக்திபெறச் செய்யவேண்டும்’ என்பது எல்லையற்ற தயையையுடைய ஈச்வரன் நோக்கு. ஸத்யஶ்ரவா- ‘ இன்ரூ நானேயோ’ என்ற பேச்சு அவாவின் மிகுதியையும் த்வரையையும் காட்டுகிறது.

மஹாமோஹன்.—[ரோஷப் பரபரப்புடன் பற்களைக் கடகட வென்று நெறித்துக்கொண்டு] ஸ்வாமீ! இதென்ன கஷ்டகாலம்! இதுவரையிலும் கேட்டிராத அவமானச் சொற்கள் என் காதில் விழுந்துவிட்டன. இனிக் கடிதம் கேட்கவேண்டிய மிச்ச மிருந்தாலென்ன, இல்லாம லிருந்தாலென்ன? யாரடா அங்கே! இக்கடிதம் கொணர்ந்தவன் கொல்லப்படட்டும்.

நாரதர்.—அரசே! இவன் தூத னல்லவோ?

மஹாமோஹன்.—அப்படியாயின் அவனை அங்கஹீநம் செய்து துரத்தி விடலாம்.

[“ தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா வாநரஸ்ய மஹாத்மந: ।
ஆஜ்ஞாபயத்வதம் தஸ்ய ராவண: க்ரோதமூர்சித: ॥ ”

[ஸுந்தரகாண்டம் 52-ம் ஸர்க்கத் தொடக்கம்.]

ஹநுமானை வதம் செய்ய ராவணன் முதலில் கட்டளையிட்டதுபோலவே இங்கும் மஹாமோஹனுடைய ஆஜ்ஞை. ‘ தூத வதம் ஒருக்காலும் செய்யலாகாது’ என்பது கோப மூர்ச்சையில் மறந்துபோயிற்று. தூத வதத்தைக் கட்டளையிட்ட தத்க்ஷணமே விபீஷணர்,

“ க்ஷமஸ்வ ரோஷம் த்யஜ ராக்ஷஸேந்த்ர ப்ரஸீத மத்வாக்யமிதம் ஶ்ருணுஷ்வ ।
வதம் ந குர்வந்தி பராவரஜ்ஞா: தூதஸ்ய ஸந்தோ வஸுதாதிபேந்த்ரா: ॥ ”

என்று தொடங்கித் தடுத்தாற்போல் இங்கு நாரதர் தடுக்கிருர். பிறகு, ‘தத: ஸ்வஶ்ருத்வோ ந ... கபித்வஜ’ என்று ராவணன் கட்டளையிட்டது போல இங்கே மஹாமோஹன் கட்டளை.]

தூதன்.—நானே மறைந்துகொள்கிறேன். [திரைக்குள் மறைகிருன்] பாக்கி நடப்பதையும் ஒளிந்திருந்து பார்த்துக்கொண்டு திரும்பிப் போகிறேன்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

நாதன் நாண்மங்கலம்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்வான், காரியதர்சி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

எங்கும் உளன் கண்ணன். அவனே சிங்கப்பிரான். எப்பொருட்கும் இறைவன் நாதன். எழுத்து அறிவித்தவன் இறைவன். எட்டெழுத்தைக் கருத்திற் குறித்திட்டு நித்தம் பரவுவோர் சிட்டர். நமது மூல மந்த்ரமே திருவெட்டெழுத்து. இம்மையிலும் மறுமையிலும், அவரவர் கோரும் நற்பயன் அனைத்தையும் அளிப்பவன் அலர்மேல்மங்கையுறை மார்பனே. அவனது அநுக்ரஹம் பெற விரும்புவோர் ஆசாரியனிடத்தில் மிகுந்த பக்தியுடன் இருக்க வேண்டும். ஆசாரியர்கள் பகவானுடைய திருவவதாரம் என்றே ப்ரபல ப்ரமாணங்கள் கூறுகின்றன. ஸ்ரீ அஹோபில மடத்தில் உயிர்தந் தளிக்கும் அதிபதியை அழகியசிங்கர் என்று தொன்று தொட்டே வழங்கப்பெற்று வரும் நுட்பம் தெளிந்து இன்புறற்கு உரியது. ஸ்ரீ வைஷ்ணவர்கள் பக்தி யோகத்தையோ அல்லது ப்ரபத்தியையோ அநுட்டிக்க வேண்டும். 'கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பதன் கருத்தும் அதுவே. உபாயங்கள் இரண்டில் ஒன்றால் மகிழ்விக்கப்பெற்ற ஸ்ரீநிவாஸனும் திருநரசிங்கப் பெருமானே அவரவர் கோரிய பயனை அவரவர் வினைப்படி அவரவர்க்கு அளிக்கின்றான். எவ்வாறு மறைமுடித் தேசிகன் திருவேங்கடமுடையானுடைய திருவவதாரமோ, அவ்வாறே ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவவதாரம். இது அனைத்துலகும் நன்கு அறிந்ததே. எனவே ஸ்ரீ தேசிகன் திருவடிகளில் உண்மையான பக்தி யுள்ளவர்கள் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனிடமும் நிகரற்ற பக்தியுள்ளவர்களா யிருக்கும் கடப்பா டுடையராக ஆகின்றனர். இதுவே இதில் ஏற்படும் ஸித்தாந்தம். எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கும் ஸ்ரீ ஸ்வாமி ஆத்யக்ஷயம் வஹித்ததான வரலாறு இங்கு நினைக்கத்தக்கது. மேலும், ஆசார்யர்களிடத்தில் அபசாரப்படுவது என்பதே கூடாது; அபசாரப்பட்டால் பகவானை வசீகரிப்பதற்காகச் செய்யப்படும் பக்தி ப்ரபத்திகளுக்குக் குறைவும் தடையும் ஏற்பட்டுவிடும். குரு தெய்வம். தெய்வம் இகழேல். ஆசார்யன், சிஷ்யன் ஆருயிரைப் பேணுமவன். நன்றி மறவேல். எழில் ஞான விளக்கை மனத் தேற்றிய மாகுருவுக்குக் கைம்மாறு மாயனும் காணகில்லான். அவர்தம் பொங்கு புகழ்ச் சாற்றி வளர்ப்பது தக்கதோர் சீரிய முறை. நமக்கெல்லாம் நாதன் நம் அழகியசிங்கரே. ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தில் நாற்பத்திரண்டாவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வண்சட

கோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகனின் நாண்மங்கலத்தைச் சற்று விளக்க முயல்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கு.

முதன்முதல் நாண்மங்கலம் என்பதுபற்றிச் சற்றுக் கூறுவாம். நாண் மங்கலமாவது பிறந்தநாட் கொண்டாட்டம். சேரர் பரம்பரையினராகிய ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பா மாலையில் நாண்மங்கலம் என்பது,

"அறந்தரு செங்கோ லருள் வெய்யோன்
பிறந்தநாட் சிறப்புரைத் தன்று" (9—24)

[தருமத்தினை யுண்டாக்கும் செங்கோலினையும் அருளினையும் விரும்பியோன் பிறந்த நாளின் நன்மையைச் சொல்லியது.] என்று குறிப்பிடப்பெற் றுள்ளது. இந்நாண்மங்கலக் கொண்டாட்டம் வெள்ளணி யென்றும் கூறப்படும்.

அரசன் நாடோறுந் தான் கைக்கொள்ளுகின்ற சிறைசெய்தல், செருச் செய்தல், கொலை புரிதல் முதலிய செருதல் தொழில்களை இந்நாளிற் கைவிட்டு, மங்கல வண்ணமாகிய வெள்ளணி அணிந்து எல்லா வுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்தலின் இதனை வெள்ளணி என்பர்.

கிள்ளி, (கோச்செங்கட் சோழன்; சோழன் செங்கணான்) என்பான் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவன்; நன்னிலம் அம்பர் முதலான ஸ்தலங்களில் எடுப்பித்த சிவாலயங்கள் இவனால் எடுக்கப்பட்டனவென்று தேவாரத்திற் கூறப்பெற்றுள்ளன. இவன் முற்பிறவியிற் சிலந்தியாகப் பிறந்து திருவானைக்காச் சிவபிரானைத் தன் வாயினூலாற் பந்தர் இழைத்துப் பூசித்த சிறப்பாற் போரசனைப் பிறந்தவன் திருமங்கைமன்னன் திருவாய் மலர்ந்தருளிய பெரிய திருமொழியில் ஆறும் பத்தில் ஆறுந் திருமொழியில் இச்செங்கணான் சிறப்பிக்கப் பெற்றுள்ளான். இரேவதி செங்கணானது பிறந்த நாள்.

வரதுங்கராமனது ஆஸ்தானத்தை அலங்கரித்து விளங்கிய புலவர் காசிக் கலியன் கவிராயர். அப்பாண்டியன் பட்டம் எய்திய காலத்தில் இக்கவிராயர் பஞ்சரத்ன மாலை பாடினார். இம்மாலையினின்று, அபிராமன் என்ற மன்னன் வீரபாண்டியன் என்ற அபிஷேக நாமம் பெற்று மகுடஞ் சூடியதையும், அவ் வேந்தன் முறையே, குடைமங்கலம் வாண்மங்கலம் நாண்மங்கலம் என்ற புறத்துறை அமையச் சிறப்பு எய்தியதையும் பாடப்பெற்ற விஷயத்தோடு பாடிய புலவ ரின்னார் என்பதனையும், அறியலாம். மேலும் இவ் ஐமணிமாலையால் தென்காசி நகரினரான கலியன் கவிராயர் என்பார் வரதுங்க ராமனாகிற வீர பாண்டியன் பட்டாபிஷேகம் பெற்ற காலத்து, அவனது வாயில் தலைமைப் புலவராய் இம்மங்கலச் செய்யுட்களை இயற்றியவர் என்பது பெறப்படும். நாண்மங்கலம் என்பது, அரசனது பிறந்த நாட்சிறப் புரைப்பதாயினும், இவனது ஆட்சி தொடங்கிய நாளைச் சென்ம தினத்துக் கொப்பக் கொண்டு இக்

கவிராயர் பாடியிருப்பதும் நோக்கத் தக்கது. இப்பாண்டியன் வில்லவனுகிய சேரனை வென்றதும், வல்ல மெறிந்ததும் இவன் பட்டம் எய்தியதற்கு முன் னிகழ்ந்தவை என்பதும் பஞ்சாத்தினப் பாக்களால் பெறலாகும்.

சோழ மன்னர்களுக் குல தெய்வமாக விளங்கியவர் தில்லையம்பதியில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமான். இதுபற்றியே முதல் ஆதித்தன், முதல் பராந்தகன் முதலான சோழ வரசர்கள், தம் ஆட்சிக் காலங்களில் தில்லை யம் பலத்திற்குப் பொன் வேய்ந்தனர். விக்கிரம சோழனும் தன் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் புறநாட்டு மன்னர்கள் செலுத்திய திறைப் பொருளைக் கொண்டு தில்லை யம்பலத்திற்கும் திருச்சுற்று மாளிகைக்கும் பலிபீடத்திற்கும் பொன் வேய்ந்து சிறப்பித்தனன் ; அங்குத் தன் பெயரால் திருவீதியும் மாளி கையும் கட்டுவித்தனன் ; தான் பிறந்த நாளாகிய புரட்டாசித் திங்கள் உத்திரட் டாதி நாளில் அம்பலம் நிறந்த அற்புதக் கூத்தற்கு ஆண்டுதோறும் பெருந் திரு விழா நிகழ்த்த எற்பாடு புரிந்தனன்.

நன்னன் வேண்மான் வேளிர் குலத்தைச் சேர்ந்தவன் ; மேன்மையை யுடையவன் ; மிக்க கொடையாளி ; பிறருடைய குற்றங்களை உள்ளடக்கிக் குணங்களையே பாராட்டி, அவர்களை மேம்படுத்தும் சிறந்த சுற்றத்தையுடைய வன் ; பொய்யா வாய்மையினன் ; ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்பவன் ; ஐம்பொறிகளையும் வென்றவன் ; பத்துப்பாட்டுள் ஒன்ருகிய 'மலைபடு கடாம்' கொண்டவன். இவன் மனைவி கற்பிற் சிறந்தவள் ; கற்பிற்கு அறிகுறியாகக் கொடியைப் பெற்றவள் பண்டைக் காலத்தில் நன்னனது நாண்மங்கல மாகிய பிறந்த நாட் கொண்டாட்டம் தமிழக முழுதும் புகழத்தக்க சிறப்புடன் நடைபெற்று வந்தமை மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனுர் கூற்றினின் றும் விளங்கும். இந்நாள் 'நன்னனுள்' என்ற பெயர் பெற்ற தென்பர் நச்சினுர்க்கினியர். ('அவன் பெயரை அந்நாள் பெறுதலின், பெயரைப் பெற்ற நன்னு ளென்ருர்.' மதுரைக் காஞ்சி 618 உரை.)

இனி நம் திருவஹோபில மடத்துக்குச் செல்வோம். ஆருவது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஷஷ்ட பராங்குச யதீந்த்ர மஹாதேசி கன். இவ்வழகியசிங்கர் திருநக்ஷத்ரம் தையொரு திங்கள் பூரட்டாதி ; ஆஸ் தானத்திற்கு எழுந்தருளின காலம் காளயுக்தி தை கிருஷ்ணபக்ஷம் தசமி (கி. பி. 1499 ஜனவரி); ஸ்ரீ அஹோபிலத்தில் குஹையில் எழுந்தருளின காலம் ஆங்கீரஸஸூ மாசிமீ கிருஷ்ண பக்ஷம் பஞ்சமி (கி. பி. 1513 பிப்ரவரிமீ"); எனவே ஆஸ்தாந நிர்வாஹ காலம் 14 ஆண்டுகள் ஒரு திங்கள். இவ்வழகிய சிங்கருடைய தனியன் அகில வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் இன்றைக்கும் அநுஸந்திக்கப் பெற்று வருகின்றது. இம்முக்கோற் பகவரை விஜய நகரத்து அரசனுன முகுந்ததேவராயன் தன்னுடைய தேசத்திற்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோய், இம்மஹான் திருவடிகளில் ஆச்ரயித்து அநேக திருப்ரதிஷ்டை கள் செய்து வந்தான். கர்நாடக தேசத்து மன்னனும் ஸ்ரீ அழகியசிங்கர்

திருவடிகளில் ஆச்ரயித்து ஸ்ரீ அழகியசிங்கருக்குத் தந்தத் திருப்பல்லக்கு ஒன்றை ஸமர்ப்பித்தான். அது 'கர்நாடகப் பல்லக்கு' என்று இம்மடத்தில் இன்றைக்கும் வழங்கி வருகின்றது. தனது நன்றியறிதலைத் தெளிவிக்க அவ்வரசன் செய்த அழகிய காரியம் ஒன்று உளது. அதாவது: திருவெவ்வுளூரில் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியில் இவ்வழகியசிங்கரின் திருவவதார தினமாகிய தைப் பூரட்டாதி யன்று அவப்ரதம் ஆகுமாறு ஒரு வார்ஷிக மஹோத்ஸவத்தைச் செய்யத் தொடங்கியதே. அன்று முதல் இன்று வரை இவ்வுத்ஸவம் நன்ருய் நடைபெற்று வருகின்றது.

இதுகாறும் கூறியவாற்ருல் நாண்மங்கலம் என்பது பிறந்த நாட் கொண்டாட்டம் என்பதும், அது பண்டைக்காலந் தொட்டே பலபடியாகக் கொண்டாடப் பெற்று வருவ தென்பதும், அது வெள்ளணி நாள் என்றும் பெயர் பெறும் என்பதும், அது ஒரு புறத்துறையில் அமைந்தது என்பதும், அரசர் பட்டாபிஷேக நன்னுளையும் பிறந்த நாளொப்பக் கொண்டாடும் வழக்கு உண்டு என்பதும், நன்னுள் தமிழகம் முற்றும் சிறப்புடன் கொண்டாடப் பெற்று வந்தது என்பதும், நாண்மங்கலத்தில் தங்கள் குல தெய்வங்கட்குப் பெருவிழா வமைத்து அனைவரும் இன்புறச் செய்தனர் என்பதும் நன்கு அறியலாம்.

இனி நாதனிடம் செல்வாம். பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான், ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீ ஆழ்வான், ஸ்வாமி தேசிகன் முதலிய மஹான்களின் திருவவதார ஸ்தலம் தொண்டை நன்னாடு. இவ்வாறு போற்றத்தக்க அந்த மண்டலம் (ப்ரணதார்த்திஹர) ஸ்ரீமதபீஷ்ட வரதனின் ஸாம்ராஜ்யம்; இதில்தான் முக்திதரு நகரேழில் முக்கியமாம் கச்சிதனில் அத்திகிரி விளங்குகின்றது. அம்மண்டலத்தில் 'இஞ்சிமேடு' எனப் பெயரிய அக்ரஹாரத்தில் நம் ஸ்ரீ அழகியசிங்கர் பாரத்வாஜ கோத்ரத்தில் தோன்றியருளினர். இவ்வழகிய பதி சேயாற்றுக் கருகில் உள்ளது. முன்னர் விளக்கப்பெற்ற நன்னாட்டில் சேயாறு என்ற நதி ஓடுவதாகச் சொல்லப் பெற்றுள்ளது.

இவ்வழகியசிங்கர் அறியவேண்டிய வனைத்தையும் அறிந்தவர்; தென் சொற்கடந்து வடசொற் கலைக் கெல்லை தேர்ந்தவர்; வைதிகர்களுக்குள் மிகவும் பெரியவர்; இருமா மரபும் செவ்வியர்; இரு வேதவேதாந்தார்த்தங்களைப் பலருக்கும் தெளிவாய் உபதேசித் தருளுபவர்; பெருமாள் பிராட்டி என்ற இருவர் திருவடிகளிலும் கரைகாணுக் காதலால் ஒன்றுபடுப்வர்; ஏகாந்தத் திருவாராதன வேளைகளில், பெருமாள் பிராட்டியாரை த்யாநம் செய்துகொண்டு அவ்விருவரிடத்தும் லயமடையும் பான்மையர்; பரஸமய கோளரி; ஸ்ரீமங்கிகமாந்த மஹா குருவே இம்மஹானுடைய உள்ளத்தில் குடிகொண்டுவிட்டார். இந் நாதன், சிட்டர் உவக்கத் தனிக்கோல் நடாத்தற்கு இன்றியமையாவாகிய பேராண்மையும் இன்னருண்மையும் ஒருங்கே பெற்றவர்; நல்லறங் காக்கும் பெருமையும், இன்னருள் சுரக்கும் எளிமையும் ஒருங்கிய பெருந்தகையாள

ராய்த் திகழ்பவர்; எத்துணைத் தண்ணியரையும் மாற்றுரையும், தமர் என்றே கொள்ளும் தனி மாண்பர்; ப்ரஹ்லாதாழ்வானே உவமையாகத்தக்க உத்தமர்; தீ மனம் அறவே மாய்த்து உலகின்கண் அன்பே பூண்டு அருளே சுரக்கும் நீத்தார் அனைவர்க்கும் உவமையாகும் தவமூர்த்தி.

நாதன் நாண்மங்கலம் ஆண்டு தோறும் தை உத்திராடத்தில் முற்றுப் பெறும் ஈரைந்து நாட் கொண்டாட்டம். மாலோல வித்வத் ஸபையே இத் திருநக்ஷத்ர மஹோத்ஸவம். உலகு என்பது உயர்ந்தோர் மேற்றே. அச்சீரிய நல்லுலகை இவ்வாண்டு விழா ஒன்றில்தான் இக்காலம் காணலாம். இதனைக் காண்பவரே கண்படைத்தவர். 1942-ஆம் ஆண்டுவரை எங்கணும் இம் மாதிரி நாண்மங்கலம் நடைபெற்றதாக எம் அறிவினுக் கெட்டவில்லை. எட்டாவது மஹாஸபை, மஹா வரப்ரஸாதியாகிய திருநரசிங்கன் திரு முன்பு நம் நாதன் சீரிய சிங்காதனத் திருப்ப வெகுவிமரிசையாய் 28-1-49ல் திருவெவ்வுளூரில் இனிது நிறைவெய்தியது. அன்று ஸ்ரீ அழகியசிங்கரின் திருமுகச் செவ்வி அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றிருந்ததை அனைவரும் கண்டு களித்து இன்புற்றனர்.

தனக்குவமை யில்லாத நம் ஸ்ரீ அழகியசிங்கரின் சதாபிஷேக மஹோத்ஸவம் நடைபெறும் நன்னாளை ஆவலுடன் எதிர்நோக்குவோம். எழுபதாண்டு நிறை வெய்தித் திகழ்கின்றார் திருவெவ்வுளூரில் இவ்வமலர். அம்மன்னவரைத் திசை நோக்கித் தொழுவோம் யாமே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

தறிதலை

[ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, B.A., B.L., அட்வோகேட், மதுரை]

உலகத்தில் புத்தி சாதுர்யங்களில் வல்லவனாய் நல்வழியில் நில்லாதானைத் தரதலை என்று வழங்குகிறார்கள். இத்தொடர்மொழி தறிதலை என்பதன் சிதைவாக வேண்டும். இதனை ஆராய்வாம். திருக்குறளில் கடவுள் வாழ்த்தில்,

" அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு. "

என்னும் முதற் குறட்பா கடவுளின் உண்மையையும்,

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

என்னும் இரண்டாங் குறளில், அவன் தாளைத் தொழுது பிறவி யறுத்தலையுங் கூறிய திருவள்ளுவர், 'மலர்மிசை யேகினன்', 'வேண்டுதல் வேண்டாமை யிலாதான்', 'இருள்சேர் இருவினையும்', 'பொறிவாயில் ஐந்தவித்தான்' எனும் இப் பாடல்களால், இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவன் நெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவர் என்பதை உடன்பாட்டாற் கூறினர். இனி: 'தனக்குவமை யில்லாதான்', 'அறவாழி யந்தணன்' என்னும் பாக்களாலும்,

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

என்னும் பாட்டாலும், அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவழிப் படுங் குற்றமுங் கூறுகின்றார். கடைசியாக உள்ள 'பிறவிப் பெருங் கடல்' என்னும் பத்தாம் பாடல், பிறவிக் கடலை நீந்தி இறைவனடி சேர்தல் குறிப்புடைத்து. தர்க்க வேதாந்த ந்யாய மீமாம்ஸா ஶாஸ்த்ரங்களில் வல்லவர்கள் கூடி விஷய விசாரம் செய்து பொருள் தெரியவேண்டிய ரீதியில் இப் பாடல்களின் சொல்லும் பொருளும் வரிசைப்பாடும் அமைந்து கிடக்கும் திறன் நோக்கத்தக்கது.

இவைகளுள் முற்கூறிய பாவ அபாவ விசாரங்களுக்கும், முடிவிலுள்ள வீடு பேற்றுக்கும் இடையே 'கோளில்...........தலை' எனும் இக் குறள் அமைந்துள்ள தாதலின், இதன் பொருள் மிகவும் கூர்ந்து நோக்கி உணரக்கிடக்கின்றது. இதற்குப் பரிமேலழகர், 'இறைவனுடைய தாள்களை வணங்காத தலைகள் தத்தமக் கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன் படுதலுடைய வல்ல' எனச் சொற் பொருள் கூறி, 'காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனில வெனத் தலைமேல் வைத்துக் கூறினர்' என்று கருத்துரைக்கிறார். இவைகளால், இரண்டிடத்திலும் 'குணம்' என்னும் சொல்லுக்குப் 'பயன்' என்னும் பொருளே கொள்ளப்படுகிறது. கேளாத காது காணாத கண் பேசாத நா முதலான பொறிகளை யுடையவன், கேட்கும் காது காணும் கண் பேசும் நா முதலிய பொறிகளை உடையவர்கள் அததனல் அடையும் பயனை யடைய வில்லை என்ற மட்டில் நிற்கிறது. ஆயினும் 'கோளில் பொறியில்' என்னும் உவமை நயத்தை உற்று நோக்குங்கால், 'குணம்' என்பதற்குப் 'பிறவிக் குணம்' (ஸ்வாபாவிக தர்மம்) என்னும் பொருள் கொள்ளுதல் மிகப் பொருத்த மாகிறது. காணுதல் கண்ணுக்கும், கேட்டல் செவிக்கும், பேசுதல் நாவுக்கும் வாய்க்கும், இயற்கையில் அமைந்த குணங்களாவன. அதுபோல் எண்குணத்தான் தாளை வணங்குதலே தலையாகிய அங்கத்திற்கு இயற்கையில் அமைந்த குணம் என்கிறார்.

வைணவ சைவ சமய குரவர்களில் முதன்மை யெய்தி நிற்பவரான நம்மாழ்வார், 'நின்கழல் சென்னி பொருமே' முதலான வாக்யங்களாலும்,

திருஞான ஸம்பந்தமூர்த்தி நாயனுர் ‘தலையே நீ வணங்காய்’ முதலான வாக்யங்களாலும், இறைவனடியில் வணங்குதலே மக்கள் படைத்துள்ள தலைக்கு இயற்கையான தர்மம் என்று பணித்துள்ளது ஈண்டு நோக்கத்தக்கது. இனி, காணமாட்டாத கண்ணுடையானைக் ‘கண்ணிலாதான்’ என்றும், கேளாச் செவி பேசா நாவுடையாரைக் ‘காதிலாதவர்’, ‘வாயிலாதவர்’ என்றும் குறிப்பிடுதல் உலக வழக்கு. ஆதலின் இறைவனை வணங்காத தலையுடையவனைத் ‘தலை யிலாதவன்’ என்பதும் பொருந்தும். இதிலிருந்தே ‘தறி தலை’ என்னும் தொடர்மொழி வந்ததென்று கூறல் பொருத்த முடைத்து. இவன் தலையுடையான்போல் காணப்படுகிரு ஞனுலும், அதன் இயற்கைச் செயலாகிய இறைவனை வணங்குதலை அத்தலை செய்யாததால், கோளில் பொறியாக அவன் தலை ஆயிற்று. இதன் கொள்ளுதல், இறைவன் திருவடி மலர்களைத் தன்மேற் கொள்ளுதல். உபமானத்திற் சொன்ன கொள்ளுதலை இதற்குப் பொருத்தி, அதனுற் பிறவிப் பெருங்கடலை நீந்தும் பயனை ஆன்மா இழந்து நிற்கச் செய்கிறது என்றபடி. மற்றைப் பொறிகள் உருவம் ஓசை முதலியவை உயிருக்குப் பயன்படாது போகச் செய்ததுபோல, அதனுல் இவன் தலை யுடைவனுகக் காணப்பட்டாலும், அவனது தலை தறிக்கப்பட்ட தலையே யன்றி உண்மையான தலை யல்ல என்றேற்படுகிறது.

காண்டலைக் கண்ணும், கேட்டலைச் செவியும், பேசுதலை நாவும், அதுபோல் உடலிலுள்ள ஒவ்வோர் அங்கமும் அதனதன் ஸ்வபாவ தர்மத்தை இடைவிடாது செய்து பயனை அநுபவித்துக்கொண்டிருக்க, தலைமட்டும் இறைவனை வணங்குதலாகிய தன் ஸ்வபாவ தர்மத்தைச் செய்து உயிருள்ளளவும் இறைவன் நினைவும் அவன் புகழ்பேசும் வாயும் அவன் பணித்த செயல்களில் ஈடுபாடுமுடையவனுக ஒருவனை யாக்கி நல்வாழ்க்கையும் நற்கதியும் அடையச் செய்தற்குக் காரணமாகிய இறைவன் தாளை வணங்குதலைச் செய்யாதான் தன் ஸ்வபாவ தர்மத்திலிருந்து தறிக்கப்பட்ட தலையையுடையவனுவான் என்னும் பொருளையே குறிப்பது.

இனி, இறைவனை ‘எண்குணத்தான்’ என்று குறித்தது, ‘இறைவன் தாளை வணங்குதலால் அவன் கல்யாண குணங்களை நினைவூட்டி நன்னெறியில் நிற்கச்செ யும்’ என்னும் பொருள் தோன்றக்கூடியதாகும். இறைவனுடைய இவ்வரும் பெருங்குணங்களில் ஒவ்வொன்றே வாழ்கதிக்கும் பரகதிக்கும் பெருந்துணையாகு மாதலானும், அவ்வக்கார்யாகார்யங்களில் அந்தந்த குணத்தைப்பற்றி நடத்தல் நல்வாழ்க்கையும் உறுதிப்பாடுடைய நடத்தையு மாகுமாதலானும், இறைவனைத் தலை வணங்குங்கால் அவன் குணங்களைச் சிந்தித்தும் பாடியும் வணங்குதல் முறை யென்பது. இக்கருத்தை,

‘தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திக்க’

என்று திருப்பாவை ஐந்தாவது பாசுரத்தில் ஆண்டாள் குறிப்பிடுகிறாள். இது பாபங்களெல்லாம் நீங்கி, ஆன்மா புண்யசீல னுவதற்கு லேசான ஸாதநம் கற்பிக்கும் அழகு. இதில் அமைந்துள்ள வரிசையும் நோக்கத்தக்கது. பெருமானைக் குறித்துச் சொல்லும் நினைவும் உடையனுதல் இயலாவிடத்துத் தலையை வணங்கித் தொழுதாவது போகும் மிக மந்தமான அதிகாரிக்கும், தொழும் போது ஏதேனும் அவன் புகழைப் பாடிக்கொண்டு தொழும் மத்யம அதிகாரிக்கும், மனம் மொழி மெய் மூன்றினுலும் வழிபடும் உத்தம அதிகாரிக்கும் ஒன்றுபோல் பயனுண்டாகும். மேலும் ஆண்டாள்,

'போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினிற் றூசாகும்'

என்கிறாள். இந்நிலையில் மனமும் மொழியும் வேறு நோக்கத்தி லிருப்பினும், தலை மட்டில் வணங்குதலாகிய தன் இயற்கைச் செயலைச் செய்யக்கடவதென்பது அதம அதிகாரிக்கு வகுத்ததாகும்.

இனி, வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திக்கத்தக்கவை இறைவனிடம் பொருந்தியுள்ள எண்குணங்களும், அவையடியாகப் பிறந்த இறைவன் செயல்களும் என்பன தோன்ற, 'எண்குணத்தான்' என்றார் எனினுமாம். மேலும், இறைவனருள் பெறுதற்கு இக் குணங்களுடைமையும் அவைகளின் ப்ரஸ்தாவமும் நினைவும் காரண மாகுமாதல், இவற்றில் எக்குணத்தையும் கண்ட விடத்தில் தலைவணங்குதலைச் செய்யவேண்டும். ஆதலின் அவைகளில் ஒன்றையோ, சிலவற்றையோ வுடைய ஒவ்வொரு பெரியாரிடமும் அவ்விறைவனே ப்ரகாசிக்கிறு னதலின், அப்பெரியார் பக்கல் தலை செய்யவேண்டிய வணக்கமும் இதனுற் குறிக்கப்படுகிறது.

'கற்றதின் பயனே நற்றாள் தொழுதல்' என்றெடுத்துப் பொறிவாயிலைந்தவித்தான் ஒழுக்க நெறியே பொய் தீர்ந்ததெனத் துணிந்து, எண்குணத்தான் தாளை வணங்கும் இயற்கையைச் செயற்கையில் கையாண்டொழுகுதலே முறையென்று முடிவிட்டது, ஐம்பொறிகளுக்கும் கற்ற கல்விக்கும் தலையே இடமாதலின், எம்பெருமான் பக்கலும் பெரியாரிடத்தும் ஸர்வ ஸமர்ப்பண நிஷ்டையை உலகத்துக்குக் கற்பித்து, இதை உணரவும் ஒழுகவும் இல்லாதார் 'தறிதலைகள்' என்பதை வற்புறுத்தினபடி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[ஸம்புடம்7, ஸஞ்சிகை 11, பக்கம் 303-ன் தொடர்ச்சி]

38 கவிதாஸாரணள ஸவெஉஉஹிதாயாம் பரயொத்தஜை: ।
சநெந்த்ருஷ்வி ச ஶாஸ்த்ரேஷு ஸஉத்ருஜிஷ்ணாததாம் யயள ॥

39 தம் ஜெநிரெ பரயாஸ்ஸவெஉ ஹரணெவிஉஷ்ணம்யியா ஹரஸரழ ।
ஸக்தஉஉணா வவிஷ்ம் ச ஹக்த்யா வ்ரூஹ்மாஉஜெவ ச ॥

40 வாணிநிம் ஶப்தஶாஸ்த்ரேஷு தகெஉ ஹள தஉஜெவ ச ।
காவ்யெ வஷ்ரீகஜநாநம் ஓஉஉம்ஸாஶாஸ்த்ரவாஸஹழ ॥

41 ஸவஉஶாஸ்த்ராஹிஸம்வளநம் ஸ்வஸத்ரம் விநயாநிதழ ।
வம் சஸம்ஸ்ஸாஸவியிநா வஶிவஸதம் சகாஸ ஸ: ॥

42 கமாஹிஸஹிஸம்வஸணஉம் கமா நாயஓவாசஜழ ।
கெஶவாயெஉ உஉஉ யஸ்த்த ஐஉம் வச நஉப்ஸவீக ॥

43 காம்ச்யாம் வஸதி யஉஉத்தா த்ரையஞ்ஞாயஉ ஐவாவஸ: ।
கடிகாயாம் ஶதஶ்லோகநிஉஉணநிபுணோ உஹாநு ॥

44 வஸஉாயஉ ஐதி வத்ரா தநாஉா வஸ்த கஸமொஉவ: ।
தஉாஶ்ரித்ய ஹரஹாண கவம் ஹஸாநாஷ்யவஸஸொஹஉாநு ॥

45 விதஸாஜ்ஞாம் ஸஉாஶ்ரித்ய ஸ்ரீவாஸபஸயஸ்த்த: ।
கநஸஹரஹீதோவரஶைஸ்ய காஞ்சீம் ப்ராவ உஸஉாநித: ॥

46 தத்ரஹகவாஸொயஸ்வஉவஸஞ்ஜம் ஸிதவஸ்ஸவஶிஷ்ய தழ ।
வஉாக்ஷஉாயாஸம்யஸ்த்தவக்ஷஸம் ஈவஉஉஶிஉநழ ॥

47 கஸம்வெத்யயெஉஉஸ்திஉஹீஸஞெவாஸிஹிஸாவர தழ ।
ஶ்ருவர தம் நித்யஉஸஞ்கெஶ்வ ஸ்ரீஶம் விஷ்ணு ஓவாவஸழ ॥

48 ஹாஷ்யாஉஉஶஉநஹஸாநு பொயயஞம் உஹாஉதிழ ।
வவநெ வஸஉாயஉஞம் ஸ்ரீவாஸாயஉ: ப்ரஸஞயீ: ॥

49 ப்ரணஉம் தஓவாஉத்யம் உஸநிஉஶீக்ஷ்யம் ஸ்வதெஜஸா ।
வஶ்யஞ்ஶ்ரீநிவாஸாயஉம் விஷயம் வஸஉம் ஹதா: ॥

50 ஸஹஸ்ரமபி வர்ஷாணாம் தேஜஸ்வாஹோ விநயோத்தமே ।
ஸ தத்த்வவித் ஸங்க்யாதும் ந ஜாநீத இயத்தயா ॥

51 ஏவம் ப்ரஹ்மா ஸ்துவம்ஸ்தத்ர ஸர்வேஷாம் ஸ்ரீவராஹாய ப்ரணம்ய தம் ।
ஸ்தித்வா ப்ராஞ்ஜலிர் ஸர்வஜ்ஞம் விதாத்ராஜ்ஞாம் வ்யஜிஜ்ஞபத் ॥

52 தத்ஸ்ருத்வா வசநம் தஸ்ய ஸ்ரீவராஹஸ்ததா ப்ரபு: ।
ஸாக்ஷாத் ப்ரத்யக்ஷரூபேண ப்ரஹ்மாணம் ப்ரத்யுவாச ஹ ॥

53 ப்ரீதிஸந்த்ராண ஸம்ப்ராப்த ப்ரஸந்ந ஸ்ரீவராஹகோ விபு: ।
நிஜ ரூபம் ப்ரதர்ஸ்ய ஸம்ஸாரம் ப்ரத்யபாஷத ப்ரணாயகம் ॥

54 ப்ரஹ்ஷ்ட வதநோத்ஸாஹ: ஸ்ரீவராஹ: ப்ரஸந்நதீ: ।
ப்ரகாஸ்ய ஸ்வாத்மரூபம் யதா ஸத்யமஸ்தித: ॥

55 ஸ்தாநாந்தரே ஸம்ஸ்தித்ய தஸ்ய ஸர்வே ஸமாகதா: ।
ஸஹஸ்ரபாத ஸ்ரீ ந்ருஸிம்ஹோ த்யேயமாம் வாஞ்சிதப்ரத: ॥

56 ஹோ ஹோ ஸ்ரீவராஹ நாமஸ்த்வம் ஸர்வேஷாம் அப்ரமேய ச ।
தவ ரூபம் ப்ரஸாதாதி ஜகதாம் ஹித காரிணா ॥

57 தவ ரூபம் ப்ரவக்ஷ்யே ஸர்வதா நாபி ஜீவயாநயா ।
த்வம் அஹம் ஸர்வ ஜ்ஞாநதா ந ஸம்வித நவா ॥

58 இதி ஸ்துவம் வசநம் ஸ்ரீ ந்ருஸிம்ஹம் ப்ரஹ்மணோத்தம: ।
ஸம்ஸேவ்யாத்ம ப்ரணம்ய ஸம்ஸேவ்ய த்வமிதி வ்யஜிஜ்ஞபத் ॥

59 ஸஹஸ்ர வர்ஷாணி ஸம்ஸேவிதா கிம் வா தவ ஸமீப: ।
ஜநார்தநோ வா காருண்யஸிந்து: ப்ரபு: ஸ்ம ஹரிர் வா ॥

60 ப்ரபவந்தம் ஸர்வம் ஸகலம் ஸ்த்ரோத்ரேண ப்ரதர்ஸ்ய ।
ஸ நாராயணோ ப்ரஹ்மணே ஸர்வமிதி ப்ரஸாதயத் ॥

61 இதி ஸம்ஸ்துத்ய ப்ரஹ்மா ஸம்ப்ராப்ய ப்ரஸாதம் ஹரே: ।
ப்ரஸந்ந ஸர்வ ப்ரதாநம் ஸர்வம் ஸத்யகாம ப்ரதா ॥

62 ஏதத்ஸ்ருத்வா ப்ரஸந்நாக்ஷம் வசநம் தத்ப்ரிய: ।
ஸ்வாநுபாவம் ப்ரபோ: கருணாவீக்ஷணஸ்ய ச ॥

63 கல்ப கோடி ஸஹஸ்ராணி ஸ்ரீ ந்ருஸிம்ஹஸ்ய ப்ரஸாதத: ।
ஸ ஸர்வ கல்யாண தைவம் நஸ்தே ஸ்ரேய: கரிஷ்யதி ॥

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

திருப்பாவை

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

இப்படி இம்மஹா வ்ரதமும் அதன் அங்கமான பாரணையும் பகவானது அநுக்ரஹத்தால் செவ்வனே முடிவு பெற்றவுடன், '𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑌿𑌨𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃' என்றபடி பகவந்நிவேதித ஶேஷத்தைப் புஜித்து அதிபவித்ரமாக்கப்பட்ட ஶரீரேந்த்ரிய மநஸ்ஸுக்களை யுடையவர்களாய்,

'𑌉𑌪𑌚𑌾𑌰𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍇𑌨 𑌕𑍃𑌤𑌾𑌨𑌹𑌰𑌹𑌰𑍍𑌮𑌯𑌾 ।
𑌅𑌪𑌚𑌾𑌰𑌾𑌨𑌿𑌮𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑍍𑌷𑌮𑌸𑍍𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ॥'

என்று பரமைகாந்திகள் பகவதாராதநாவஸாநத்தில் ப்ரார்த்திக்கும் க்ரமத்தில்,

"𑌸𑌖𑍇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌹𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌹𑍇 𑌯𑌾𑌦𑌵 𑌹𑍇 𑌸𑌖𑍇𑌤𑌿।
𑌅𑌜𑌾𑌨𑌤𑌾 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌤𑌵𑍇𑌦𑌂 𑌮𑌯𑌾 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌯𑍇𑌨 𑌵𑌾𑌪𑌿 ।
𑌯𑌚𑍍𑌚𑌾𑌵𑌹𑌾𑌸𑌾𑌰𑍍𑌥𑌮𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌸𑌿 𑌵𑌿𑌹𑌾𑌰𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨𑌭𑍋𑌜𑌨𑍇𑌷𑍁।
𑌏𑌕𑍋𑌽𑌥𑌵𑌾𑌪𑍍𑌯𑌚𑍍𑌯𑍁𑌤 𑌤𑌤𑍍𑌸𑌮𑌕𑍍𑌷𑌂 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌾𑌮𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌮𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌂 ॥"

என்று தநஞ்ஜயன் க்ஷமைகொண்ட ஶைலியை அவலம்பித்துப் பெருமாளை அபசாரக்ஷமை செய்தருளவேண்டு மென்று அநுநயம் செய்கிறார்கள்.

28\. கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத வாய்க்குலத் துன்றன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா வுந்தன்னோ
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோ மன்பினா லுன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவுஞ் சீறி யருளாதே
இறைவா நீதாராய் பறையேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம் அறிவொன்றும் இல்லாத ஆய் குலத்து—மாடுகளை ஓட்டிக்கொண்டு அவைகள் பின்னேபோய்க் காடு சேர்ந்து அங்கே போஜநம் செய்யும் ஸ்வபாவ முடைய எங்களது விவேக சூந்யமான இடையர் குலத்தில்; ['மாடே தோழி; காடே சரணம்' என்றிருக்கு மெங்கள் ஜாதிக்கு உலக நடவடிக்கை யொன்றும் தெரிய ப்ரஸக்தியில்லை யாகையால், எங்களுடைய அபராதங்களை யெல்லாம் அஜ்ஞாநக்ருதமே தவிர புத்திபூர்வ மல்ல வென்பது கருத்து.] உன்தன்னை பிறவி பெறுந்தனை புண்ணியம் யாம் உடையோம்—உன்னை எங்களுக்கு ஸகோத்ர

னாகப் பெறுவதற்குள்ள புண்ணியத்தை நாங்கள் உடைத்தாயிருக்கிறோம்; [அதாவது: ஏதோ ப்ரபலமான ஜந்மாந்தர ஸுக்ருதம் காரணமாகப் பாமரஜ்ஞாநிகளான எங்கள் குலத்தில் எங்களுடன் ஸமமாக நீ வந்து தோன்றத்தக்க மஹா பாக்யத்தைப் பெற்றோம். இத்தால் எங்களுக்கு மேன்மை வாய்ந்ததே தவிர உனக்கு யாதொரு குறையுமில்லை யென்கிறார்.] குறைவு ஒன்றும் இல்லாத—யாதொரு குறைவு மற்ற; [அதாவது: எப்போதும் ஸமஸ்த காமனாயிருக்கிற;] கோவிந்தா!–[ஸமஸ்த ஜகத் ரக்ஷகனாயிருப்பதுபற்றிக்] கோவிந்த னென்று திருநாமம் பூண்டவனே!; உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது— உன்னோடுள்ள ஸம்பந்தம் நமக்கு இங்கு எவ்விதத்திலும் போக்கடிக்க முடியாது; [அத்தாவது: நீ எங்களது ஆயர் குலத்தில் தோன்றியதால் ஏற்பட்ட குடல் துவக்குமட்டி லல்ல; நீ கோவிந்த னாகையால், ஸமஸ்த ஶப்த வாச்யனாகவும் ஸமஸ்த சேஷியாகவும் இருப்பது பற்றி, உந்தனுக்கும் உனது சேஷகோடியில் சேர்ந்த நமக்கு முள்ள ஸம்பந்தம் நித்ய மாகையால் அது உன்னாலாவது எங்களாலாவது ஒழிக்க முடியாது; ஆகையால்]; அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னை சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே— இந்தக் காரணங்களையெல்லாம் கணிசித்து முதிர்ந்த விவேகம் ஏற்படக்கூடாத இளம் பிராயத்தி லிருக்கும் நாங்கள் உன்னை ஸ்நேஹத்தால் சிறுபெய ரிட்டுக் கூவிய யழைத்த அபராதத்துக்காக எங்கள்மீது கோபங்கொள்ளாதே. [ஜாதிக்குரித்தான ஞானக்குறைவுடன் எங்கள் இளம் பிராயத்துக்குள்ள அவிவேகமும் சேர்ந்தால் எங்கள் அபராதங்கள் புத்திபூர்வ மல்ல வென்று நீ கொள்ள வேண்டும். தவிரவும், இப்போது உனக்கும் எங்களுக்கும் உள்ள பாந்தவ்யத்தையும் நமக்குள் நித்யஸித்தமான சேஷசேஷி பாவ ஸம்பந்தத்தையும் நன்கு பராமர்சித்து, ‘ரக்ஷா நிரபேக்ஷோऽபி ஶிஶுஸ்நேஹநயோ ந ஜாத ஶாத ஶுஶ்ரூஷணோ ஜிஹாஸதி’ என்ற கணக்கில் உன் கையையே எதிர்பார்த்து நிற்கும் எங்கள் மீது சீற்றம் கொள்ளலாகாது. ‘சீறி யருளாதே’ என்றதால், பகவானுடைய சீற்றமும், அபராதியான புத்ரன் விஷயத்தில் அவனை ஶிக்ஷித்து நல்வழியில் திருப்ப முயற்சிக்கும் பிதாவின் கோபம்போல் ஹிதப்ரவர்த்தநத்துக்காக ஏற்பட்ட தாகையால் க்ருபா ப்ரயுக்த மென்று ஸூசிதம். ஆனால் அதி துர்ப்பலைகளான எங்களுக்கு உனது கோப பாவனைகூட துஸ்ஸஹமா யிருக்கு மாகையால், அதைக்கூட நீ க்ருபைசெய்து ஆவிஷ்கரிக்கடா தென்பது கருத்து. அல்லது ‘அருள்’ என்பதை எதிர்மறையில் அந்வயித்தால், அருள்புரிந்து சீற்றத்தைக் கைக்கொள்ளாதே; அதாவது: சீறுதேயருள் என்று அர்த்தம் கொள்ளலாம்.] இறைவா—ஸர்வ ச்ரேஷ்டனான ரக்ஷகனே! [இத்தால், நாங்கள் சிறு பெயர் இட்டழைத்தால் உனக் கொன்றும் குறை வாராது; கிஞ்ச உன்னுடைய அத்யுந்நத ஸ்வபாவமும் மஹௌதார்யமும்தான் விளங்கும் என்று தாத்பர்யம்; ஆகையால்]; நீ பறை தாராய்— நாங்கள் மநோரதித்த பலனைத் தரவேணும்; [அதாவது: நாங்கள் அநுஷ்டித்த வ்ரதத்தின் பரமபலம் எவ்விதத் தடையு மில்லாமல் எங்களுக்குக் கிடைக்கும்படி அநுக்ரஹிக்கவேண்டும். வ்ரதம் ஏற்கனவே முடிவுபெற்று அவப்ருதமும் நடந்தேறிப் பாரணையும் செய்தபிறகு இப்படி ப்ரார்த்திப்பதின் காரணம் என்னவென்றால், ப்ரதாந யஜ்ஞம் முடிந்தபிறகு

அநுயாஜாதிகள் ஏற்பட்டிருப்பதுபோலும், ப்ரதாந ஹோமம் முடிந்தபிறகு மத்யே ஸம்பாவித ந்யூநாதிரேக ப்ராயச்சித்தார்த்தம் ஆஹுதி செய்வது போலும், தாங்கள் வ்ரதாநுஷ்டாநம் செய்ததில் ஏற்பட்ட தவறுதல்களை க்ஷமித்தருளி க்ரியாஸாபல்யத்தை ஸ்திரப்படுத்தவேணுமென்று ப்ரார்த்தித்தது மேலையார் செயலை அநுஸரித்ததேயாகும். ஏல் ஓர் எம் பாவாய்.—

இப்படி ப்ரார்த்தித்ததன்மேல் பகவான் அபிமுகராய் 'ததாஸ்து' என்று அபீஷ்டதாநம் செய்து இவர்களுடைய பரிசுத்தமான பாவத்தை அபிநந்தநம் பண்ணிக் குளிரக் கடாக்ஷித்தருள, அத்தால் இவர்களுக்கு விஶுத்தமமான ஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்து, அவ்வித ஜ்ஞாந விகாஸத்தின் பலமாக ஓர் அவஸர விசேஷத்தில் தங்களுக்கு இம்மட்டில் த்ருப்தியில்லையாகையால், நிரவதிக நித்ய கைங்கர்ய ஸாம்ராஜ்யம் தந்தருளவேணுமென்றும், அதுவே தங்களுக்குப் பரமோத்தேச்யமென்றும் விண்ணப்பம் செய்கிறார்கள்.

29. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோ
டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து — பொழுது விடிய வெகு நேரம் முந்தியே, (அதாவது: பஞ்ச பஞ்ச உஷ: காலத்தில்) உனது திருக்கோயிலுக்கு வந்து உன்னைத் தண்டம் ஸமர்ப்பித்து; உன் பொன் தாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்—உனது ஸர்வ ச்லாக்யமான திருவடித் தாமரைகளையே சரணமாகப் பற்றி ஸ்தோத்ரம் செய்வதின் தாத்பர்யம் என்னவென்றால்; கோவிந்தா!—ஹே கோகுலநாத!; பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ குற்றேவல் எங்களை கொள்ளாமல் போகாது—மாடு மேய்த்து ஜீவநம் செய்யும் எங்கள் ஆயர் குலத்தில் அவதரித்திருக்கும் இத்தசையில் நாங்கள் உனக்கு அந்தரங்க கைங்கர்யங்கள் செய்வதைத் தடைசெய்யாம லிருப்பது (அதாவது: செய்யும்படி அநுஜ்ஞை பண்ணுவது) என்கிற; இற்றை பறை—இந்த ப்ரயோஜநத்தை மட்டில்; கொள்வான் அன்று காண—நாங்கள் பரம பலமாக அத்யவஸித்தோமல்லோமென்பதை விஜ்ஞாபநம் செய்கிறோம்; (கிந்து எங்களுடைய பரமோத்தேச்யமானது) எற்றைக்கும் — எக்காலத்திலும்; ஏழேழ் பிறவிக்கும்—எத்தனை ஜந்மங்கள் நாங்கள் எடுத்தபோதிலும்; [இங்கு 'ஏழேழ்' என்பது அநேக ஜந்மங்களுக்கு உபலக்ஷணம்:

" யத்ர யத்ர க்வசைவாஸ: யேஷு கேஷு பவேஷு ச ।
தவதாஸ்யைகபோகோ ஸ்யாம் ஸதா ஸர்வத்ர ஸர்வதா: "

என்றபடி ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும்;] உன்தன்னோடு உற்றோமே ஆவோம்—உன்னை விட்டுப் பிரியாமல் உனக்கு அப்ருதக்ஸித்த சேஷபூதர்களாகவே யிருப்போம்; [அதாவது: எங்களுக்கு ஸ்வரூப ப்ராப்தமான நிருபாதிக பகவச்சேஷத்வ ஜ்ஞாநம் அநுபவ பர்யந்தமாய் அதிரஸ்யமாய் ஸர்வதா ப்ரகாசிக்கவேணும்;] உனக்கே நாம் ஆள் செய்வோம்—இவ்விதமான ஜ்ஞாநத்துக்கு அநுகுணமாக உந்தனுக்கே ஸர்வதா நாங்கள் அடிமைத் தொண்டு செய்யவேணும்; மற்றை நம் காமங்கள் மாற்று—வேறு எவ் விஷயத்திலும் எங்களுக்கு ருசி பிறவாதபடி நீ ஒழிக்கவேண்டும்; [இத்தால் ஸமஸ்த ப்ரதிபந்தங்களும் நீங்கி அவிச்சிந்நமாய் ஏகரூபமாய் அத்யந்த ப்ரீதி விஷயமான பகவச்சேஷத்வ ஜ்ஞாநத்தை முன்னிட்டுக்கொண்டு அவன் தனக்கே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸமுசித கைங்கர்யங்களைச் செய்து ஆத்மலாபம் பெறும்படி அநுக்ரஹிக்கவேணு மென்று அநந்ய ஶரணர்களான நாங்கள் உன் திருவடிகளைச் சரண மடைகிறோ மென்று கூறியதாயிற்று. இது த்வயாநுஸந்தாந க்ரமத்தில் அநுஷ்டிக்கப்பட்ட ப்ரபத்தி நிஷ்டை யென்பது ஸுவ்யக்தம். ஸர்வார்த்த ஸாதகமாயும் ஸக்ருத் கர்த்தவ்யமாயும் ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந் நரம் என்கிறபடி... ஸக்ருதேவ ஹியாயு மிருக்கும் இம்மஹா ப்ரபாவமுள்ள உபாய விசேஷத்தை அநுஷ்டித்தவாறே பெருமாள் அதிப்ரஸந்நராய் இவ்வதிகாரிகளுக்குக் கோரின பலத்தை உடனே தந்து இவர்களை க்ருதார்த்தர்களாக்கினு ரென்பது அர்த்த ஸித்தம். இதை, 'ஏலோ ரெம்பாவாய்' என்று மற்றுமுள்ள தோழிமாருக்கு ப்ரகடநம் செய்து அவர்களுடைய விச்வாஸத்தை த்ருடீகரிக்கிறூர். இங்கு, 'பெற்றம் மேய்த் துண்ணும் குலம்' என்றதால், ஆகிஞ்சந்யாநுஸந்தாந ரூபமான கார்ப்பண்யம் சொல்லப்பட்டது. 'உன் தன்னோ டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்' என்றதால், ஆநுகூல்ய ஸங்கல்பமும் மஹாவிச்வாஸமும் நிர்த்தேசிக்கப்பட்டன. 'மற்றை நங் காமங்கள் மாற்று' என்றதால், ப்ராதிகூல்ய வர்ஜநம் கூறப்பட்டது. 'மாற்று' என்கிற ப்ரார்த்தனையால் கோப்த்ருத்வவரணமும் செய்யப்பட்டது. 'உன்னைச் சேவித்துன் பொற்று மரையடியே போற்றும்' என்றதால், ஸ்வரக்ஷா பரந்யாஸம் குறிக்கப்பட்டது.

இப்படி இப்பாசுரத்தில் ஆண்டாள் ஸமஸ்தாங்க புஷ்கலமான ப்ரபத்தி தர்மத்தை அநுஷ்டித்துப் பகவானுடைய நித்ய கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தை யடைந்து, மற்றெல்லாரும் இவ்வநுஷ்டாநத்தைப் பின்பற்றி உஜ்ஜீவிக்கும்படி பரமோபகாரம் ஸர்வ ஜகத்துக்கும் செய்துள்ளா ரென்பது நிராக்ஷேபம். இப்பாசுரத்தை அநுஸந்தித்துக்கொண்டே ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ வைகுண்ட கத்யத்தில்,

"அநவதிகாதிஶய ஸ்ரீ தீகாரிதாஶேஷாவஶ்யா ஶ்ரீதாஶேஷஶேஷைகரதிரூப நித்ய நிரவத்ய நிரதிஶய ஸுகாவஹ ஸேவைக ஸாதநாய ஸ்வாமி ஸமஸ்த ஸுஹ்ருத் ஸர்வ ஶரணாகதிய ஸஞ்ஜீவிதா அவிரதாந்தஸ்தம்பே. ஸந்ததே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே" என்று அருளிச்செய்தார்போலும்.

இதையே பலச்ருதி ரூபமாக மேல் பாசுரத்தில் அருளிச்செய்கிறர் :—

30\. வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை யணிபுதுவைப்
பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரண்டு மால்வரைத்தோள்
செங்கட் டிருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

[பதவுரை] வங்கக் கடல் கடைந்த—வர்த்துலாகாரமான க்ஷீராப்தியை மதநம் செய்த; ['வங்கக் கடல்' என்பது 'கலசபயோதி' என்பதற்குப் பர்யாய மென்று கொள்ள ப்ராப்தம். 'வங்கம்' என்பது 'பங்கம்' என்பதன் திரிபு என்று கொண்டால் 'அலைகள் புரளும் கடல்' என்று அர்த்தம் கூறலாம். அப்போது கடையும் ஸமயத்தில் ஸமுத்ரத்தில் அலைகள் நாற்புறமும் சுழல்வது குறிக்கப்பட்டதாகும். வங்கம் என்று மரக்கலத்துக்குப் பெய ருள்ளபோதிலும், க்ஷீர ஸமுத்ரத்தில் கப்பல் ஓடுவதாகச் சொல்வது யுக்தமாகத் தோன்றவில்லை யாதலால், 'கப்பலோடும் கடல்' என்று இங்குப் பொருள் கூறுவது ஸ்வரஸமாகப் புலப்படவில்லை.] மாதவனை—லக்ஷ்மீநாதனை; கேசவனை—(கஶ்ச ஈஶஶ்ச கேஶௌ தாவவதீதி கேஶவ:) ப்ரஹ்மாவையும் ருத்ரனையும் ரக்ஷிக்கிற பரமாத்மாவான நாராயணனை;

"ஸேந்த்ராஸ் ஸுராஸ் ஸஹஸாத்யா தைத்யவீரா
க்ஷீராப்தௌ ச நிஷேதுஷ்யஸ்ஸுதீந: ।
கோடிஶ: ப்ரஜாபதயஸ்ததீ வஶிவாதி......"

இத்யாதிகள் இங்கு அநுஸந்தேயம். க்ஷீராப்தி மதந காலத்தில், அதில் லக்ஷ்மீ ஆவிர்ப்பவித்து, 'பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:' என்றபடி பகவானுடைய வக்ஷஸ்தலத்தில் அமர்ந்ததை நினைத்து 'மாதவ' சப்தமும், ப்ரஹ்ம ருத்ராதி ஸமஸ்த தேவர்களையும் ரக்ஷிப்பதற்காக அவர்களுக்கு அம்ருதத்தைத் தருவதற்கு ஸமுத்ர மதநத்தைப் பகவான் செய்வித்தபடியால், அவ்வித ரக்ஷணத்தை மனத்தில் வைத்து இங்குக் 'கேசவ' சப்தமும் ப்ரயோகிக்கப்பட்டிருப்பது மிகவும் உபபந்நமாகும்.] திங்கள் திருமுகத்து சேயிழையார்—சந்திரன் போன்ற அழகிய முகங்களையுடைய ஸ்த்ரீகள்; [அதாவது: ரூபவதிகளான கோப கந்யகைகள்]; சென்று இறைஞ்சி—போய் வணங்கி; [அதாவது: மார்கழி மாதத்தில் யமுனையில் நீராடி காத்யாயநீ பூஜை செய்து கடைசியாக ஒரு தினத்தில் க்ருஷ்ணன் அவ்விடம் வந்து அவர்களுடைய வஸ்த்ரங்களை யெடுத்து மறைத்தவுடன் அவருடைய நியமப்படி நக்நர்களாக அவரை யணுகி இரு கைகளாலும் ப்ரணாமம் பண்ணி;] அங்கு—திருவாய்ப்பாடியில், அப்பறை கொண்ட—அந்த பலத்தை யடைந்த; [அதாவது: க்ருஷ்ண ஸமாகம ரூபமான தாங்கள் கோரிய பலத்தைப் பெற்ற]; ஆற்றை-ப்ரகாரத்தை;

அணி புதுவை—அழகு வாய்ந்த ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த; பை—பசுமை யான; [அதாவது: ப்ரத்யக்ஷதையால் ஸுபகமான; தண்—சீதளமான; [அதாவது: ஸுகஸ்பர்சமான]; கமலத் தெரியல்—தாமரைப் பூ மாலையை யுடைய; [அதாவது: பெருமாளுக்குச் சாத்துவதற்காக எப்போதும் புதியதான ஸுகந்த புஷ்பமாலையைக் கையிலேந்திய; பட்டர்பிரான்—ப்ராம்ஹண ச்ரேஷ்டரான பெரியாழ்வாருடைய திருமகளாரான; கோதை சொன்ன—கோதை என்ற திருநாமம் பூண்ட ஆண்டாள் அருளிச்செய்த; சங்கம் தமிழ் மாலை முப்பதும்—புலவர்களால் வழங்கும் தமிழ் முறையில் இயற்றப்பட்ட முப்பது பாசுரங்களின் கோவையாகிய இந்த ப்ரபந்தத்தை; [அல்லது: எளிதான தமிழில் அமைக்கப்பட்ட இக்கோவையிலுள்ள முப்பது பாட்டுக்களையும்; இவ்விரு குணங்களும் இங்கு விவக்ஷிதம். 'மாலை' என்றதால், இப்பாசுரங்களின் சொல்லழகும் மார்த்தவமும் பொருள் மேன்மையும் ஒன்றுக்கொன்று பொருந்தி யிருக்கும் வரிசையின் சோபையும் இது தேவார்ஹ மென்பதும் ஸூசிக்கப்பட்டன.] தப்பாமே இங்கு இப்பரிசு உரைப்பார்—தவறுத லின்றி [அதாவது: பதப் பிழை அக்ஷரப் பிழை ஸ்வரப் பிழை முதலிய குறைவின்றி] இவ்வுலகத்தில் இதே மாதிரியாக (அதாவது: இந்த வரிசையாகவே) அநுஸந்திப்பவர்கள்; ஈர் இரண்டு மால் வரை தோள்—பெரிய மலைகள் போன்ற நான்கு திருத்தோள்களையுடைய; செங் கண்—சிவந்த திருக்கண்களை யுடைய; திருமுகத்து—அழகிய முகத்தை யுடைய; செல்வம் திருமாலால்—நித்ய ஸம்பத்தையுடைய ச்ரிய: பதியான நாராயணனால்; [அதாவது: அவனுடைய ஸங்கல்பத்தால்]; திருவருள் பெற்று—லக்ஷ்மீ கடாக்ஷத்துக்கு லக்ஷ்ய பூதராய்க்கொண்டு; எங்கும்—எவ்விடத்திலும்; [அதாவது: இவ்வுலகத்திலும் மற்றுலகத்திலும்]; இன்புறுவர்—ஆநந்தத்தை யடைவார்கள்; [அதாவது: இந்த ஜந்மத்தில் துக்கம் கலக்காத ஸுகத்தை அநுபவித்து, இந்த ஜந்மம் முடிந்தவுடன் மோக்ஷத்தை யடைந்து உத்தராவதி ரஹிதமான பரமாநந்த பரிதராவார்கள்.] எம் பாவாய்—பதுமை போன்ற அழகிய என் தோழிப் பெண்ணே!

இப்பாசுரம் பலச்ருதியாகையால் இதில் விசாரிக்க வேண்டிய அம்சமொன்று மில்லாததுபற்றி 'ஏலோர்' என்று அநுவர்த்திக்கவில்லை யென்று காண்க.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

இதி ஶம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ஞு வைகாசி (வ்ருஷப) மீ மே - ஜுன் - 49.

14—5—49	1உ	சனிக்கிழமை	...	சூந்ய திதி; விஷ்ணு பதி; வ்ருஷப ரவி 6.53 [வ்ருஷப ஸங்க்ரமண தர்ப்பணம்]
15—5—49	2உ	ஞாயிற்றுக்கிழமை	...	க்ருஷ்ண சதுர்த்தி திதி
16—5—49	3உ	திங்கட்கிழமை	...	க்ருஷ்ண பஞ்சமி திதி
17—5—49	4உ	செவ்வாய்க்கிழமை	...	க்ருஷ்ண ஷஷ்டி திதி
18—5—49	5உ	புதன்கிழமை	...	அதிதி
19—5—49	6உ	வியாழக்கிழமை	...	க்ருஷ்ண ஸப்தமி திதி
23—5—49	10உ	திங்கட்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
26—5—49	13உ	வியாழக்கிழமை	...	ஸ்ரீ அ. மடம் 39-ம் பட்டம் ராஜமன்னார் கோவில் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
27—5—49	14உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
5—6—49	23உ	ஞாயிற்றுக்கிழமை	...	சுக்ல நவமி திதி
6—6—49	24உ	திங்கட்கிழமை	...	சுக்ல தசமி –ஏகாதசி திதி த்வயம்
7—6—49	25உ	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி வ்ரதம்; த்வாதசி திதி
9—6—49	27உ	வியாழக்கிழமை	...	ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
10—6—49	28உ	வெள்ளிக்கிழமை	...	ஸ்ரீ அ. மடம் 35-ம் பட்டம் களத்தூர் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
12—6—49	30உ	ஞாயிற்றுக்கிழமை	...	க்ருஷ்ண த்விதீயை திதி
13—6—49	31உ	திங்கட்கிழமை	...	க்ருஷ்ண த்ருதீயை திதி

விரோதி ஞு. வைகாசி மீ சுக்ல தசமி – ஏகாதசி திதி த்வய விசாரம்.

கஞ்சனூர் வாக்ய பஞ்சாங்கப்படி – அஹஸ் 31.23.

5—6—49	23உ	ஞாயிற்றுக்கிழமை	...	நவமி 25 3
6—6—49	24உ	திங்கட்கிழமை	...	தசமி 18.59
7—6—49	25உ	செவ்வாய்க்கிழமை	...	ஏகாதசி 13.3

இதன்படி ஞாயிற்றுக்கிழமை அபராந்ஹாதி 18.50; அபராந்ஹாந்தம் 25.5 ஆகையால், தசமிக்கு அபராந்ஹ வ்யாப்தி 2 – விநாடியே. திங்கட்கிழமையன்று தசமிக்கு அபராந்ஹ வ்யாப்தி 9 விநாடி. ஆகையால் திங்கட்கிழமையே தசமி; அன்றே ஏகாதசி. ஆகையால் அன்றைத் திநமே தசமி – ஏகாதசி திதி த்வயம்.

ஸ்ரீரங்கம் வாக்ய பஞ்சாங்கப்படி அஹஸ் 31.32.

5—6—49	23உ	ஞாயிற்றுக்கிழமை	...	நவமி 25.6
6—6—49	24உ	திங்கட்கிழமை	...	தசமி 19.1
7—6—49	25உ	செவ்வாய்க்கிழமை	...	ஏகாதசி 13.6

இதன்படி அபராந்ஹாதி 18.56; அபராந்ஹாந்தம் 25.14 ஆகையால், ஞாயிற்றுக்கிழமை தசமிக்கு அபராந்ஹ வ்யாப்தி 8 விநாடி; திங்கட்கிழமை தசமிக்கு அபராந்ஹ வ்யாப்தி 5 விநாடி; ஆகையால் ஞாயிற்றுக்கிழமையே தசமி திதி; அன்றைத் தினமே நவமி திதி; ஆகையால் அன்றே நவமி–தசமி திதி த்வயம். அஹஸ்ஸும் திதி இருப்பும் பேதிக்கிற படியால் இந்தப் பேதம் தென்படுகிறது. அஹஸ், திதி இருப்பு, இவைகள் பேதிப்பதற்கு அவரவர்களுடைய க்ரந்தங்களே ப்ரமாணம்.

குறிப்பு.—வைகாசி மீ. 29உ சனிக்கிழமையே ஜ்யேஷ்டாபஹுளம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

பம்பாயில் ஸ்ரீ அழகிய சிங்க்ருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மடத்துத் திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம், பம்பாய் மாதுங்காவில் ஸ்ரீ. உப. M. V. ராமஸ்வாமி ஐயங்கார் க்ருஹத்தில் 28—1—49-ல் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் க்ருபையால் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ப்ராத: காலத்தில் பெருமாளுக்குத் திருமஞ்ஜநமும் திருவாராதநமும் நடந்தேறின. பின்னர் பெருமாள் தீர்த்தமும் ஸ்ரீ பாதுகா தீர்த்தமும் விநியோகிக்கப்பட்டன. ராத்ரி ஸஹஸ்ர நாம பாராயணமும் ஸம்பாவனைகளும் நடந்த பின்னர், 'ப்ரஹ்லாத சரித்ரம்' உபந்யஸிக்கப்பட்டது. ஏராளமான ஸ்ரீ வைஷ்ணவ வைதிக லௌகிக ப்ரபுக்கள் வழக்கம்போல் ஏகோபித்து மஹோத்ஸவத்தை நடப்பித்தது போற்றத்தக்க தாகும். ஸ்ரீ. உப. A. S. ஐயங்கார் ஸ்வாமி, B.A., L.L.B., J.P., ஸ்ரீ. உப. S. S. ராஜகோபாலையங்கார் ஸ்வாமி, B.A., முதலிய வித்வான்களும், மற்றும் பல வைதிக லௌகிக ப்ரமுகர்களும் ஷை ப்ரஹ்லாத சரிதத்தை ச்ரவணம் பண்ணி ஆநந்தித்தார்கள்.

முகுந்தகிரி வங்கீபுரம் வரத தாஸன்

* * * *

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

ஸ்ரீ அழகியசிங்கர் எழுபதாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய எழுபதாண்டுநிறைவு விழாக் கொண்டாட்டம் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தில் திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸர்வதாரி வருஷம் மாசித் திங்கள் முப்பதாம் நன்னாள் (13-3-1949) ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகியது. ஸ்ரீமான் அட்வொகேட் V. K. பார்த்தஸாரதி அய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்தார். காரியதரிசி கடவுள் வாழ்த்துப் பாட, தலைவர் முன்னுரை வழங்க, ஸ்ரீமான்கள் C ஜகந்நாதாசார்யர் அவர்கள் வித்வான் M.A., குருச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியர் அவர்கள், M.A.L., L.B., வித்வான் ஸ்ரீ. உ.. வே முக்கூர் ராஜகோபாலாசாரிய ஸ்வாமி, ஆகிய இன்னோர் முறையே 'விபீடணன் அடைக்கலம்,' 'ப்ருங்கலாத பட்டாபிஷேகம்', ஸ்ரீ அழகிய சிங்கர்கள் புகழ்மாலை' எனும் விஷயங்களைச் செவ்விதாக உபந்யஸித்தார்கள். தலைவர் முற்றுரையில், ஸ்ரீ அழகியசிங்கரின் குணாதிசயங்களைப் பரக்கப் பேசி அன்று சொற்பொழிவுகள் யாவும் சரணாகதியின் நுட்பத்தைச் சால விளக்கினவாறனை எடுத்துக் காட்டினார். காரியதரிசி வந்தனோபசாரம் வழங்க முற்பகற் கொண்டாட்டம் 11-45 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

மறுபடியும் விழா பிற்பகல் 2-45 மணிக்குத் தொடங்கியது. ஸ்ரீமான். M. R. சார்ங்கபாணி அய்யங்கார் அவர்கள் A.M.I.E., B.A., B.Sc. (Eng.) அவைத் தலைமை தாங்கினார். காரியதரிசி கடவுள் வாழ்த்துப் பாடினார். தலைவர் தமது முன்னுரையில், ஸ்ரீ அஹோபில மடத்தின் தொன்மையையும், அது சிறந்த வித்யாஸ்தானமாக விளங்கி வரும் பான்மை

யையும், ஸ்ரீ அழகியசிங்கர் சொற்ப காலத்தில் பிறர் எவரும் செய்யாதிருந்த அபூர்வமான அற்புதமான செவ்விதான சாச்வதமான காரியங்களை நிறைவேற்றியுள்ள வன்மையையும் மிகப் போற்றிப் பேசினார். தேரழுந்தூர் ஸ்ரீமான் V. ரங்காசாரியர் அவர்கள் 'திருவடி கண்ட திரு' என்பதற்கு 24 படி கண்டு, அத்தலைப்புடன் தாம் யாத்த செவ்விய மதுரகவிகளைப் பாடி உரை விரித்து அவையோர் ஆநந்திக்கச் சொற்பொழி வாற்றினார்.

காரியதரிசி, அன்று மஹோத்ஸவத்துக்காக மதுரை அட்வொகேட் தார்மிகரத்நப்ரதீப ஸ்ரீ. உப. N. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி 11—3—49-ல் அனுப்பியிருந்த கீழ்க்கண்ட நிருபத்தைப் படித்தார்:—

“ஸ்ரீ. உ.ப. வே. வித்வான் திருமலை ஐயங்கார் ஸ்வாமிக்குத் தெண்டன் ஸமர்ப்பித்த விஜ்ஞாபனம். உபய க்ஷேமம். ஸ்ரீ அழகியசிங்கர், 70-வது ஆண்டு நிறைவு விழாவும், சங்கத்து 19-வது வெளியிடான 'முக்கோற் பகவர்' நூற்றிரு விழாவும், ஸ்ரீ அஹோபில மடத்தில் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தில் கொண்டாடப்பெறுவதை அறிய மிகவும் களிப்படைகிறேன். ஸ்ரீ அழகியசிங்கருக்கே மிகப் பொருத்தமான நூற்றிரு விழாவும், ஆண்டு நிறை விழாவுடன் சேர்ந்தமைந்துள்ளது இதே அஹோபில மடத்தில் இந்த அழகிய சிங்கருக்கே. நூற்றிரு (102) ஆண்டு நிறைவு விழாவும் நடப்பதைக் கண்டு களிக்க ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ள முவந்து அமைத்திருக்கிறானே என்று கருதுதற் கிடந்தருகிறது.................இந்த 102-வது விழாவினும் நல்ல விழா மற்றொன் றிருக்கத்தக்கதில்லை யாதலின், இதற்கு 'நன்னூற் றிருவிழா' வென்று பெய ரமைந்திருக்கிறது......... அடியேன் பக்கல் எவ்வித முயற்சியு மின்றித் தோன்றிய பாடலை எழுதுகிறேன்:—

காசினிக்குச் சேவைசெய்யக் கண்ணரை சிங்கரைப்
பேசியுன்னி நேர்வணங்கு பெருமையோங்கு பெற்றியன்
தேசிசைந்த சீரரங்க மாறநாம யோகிதான்
மாசினின்று நீங்குநாண் மனத்தில்வைத்து வாழ்வமே,

குறிப்பு:— லோகோஜ்ஜீவனார்த்தம் கைங்கர்ய ஸ்ரீயில் ஈடுபாடுடன் 'எங்குமுளன் கண்ணன்' என்று பிள்ளை காட்டினான். ஆனால் தூணைப் பிளந்து நாரசிங்கம் வந்தது, ஆனதால் அது கண்ணனாகிய நாரசிங்கம். இருவருமே ப்ரதான விக்ரஹங்களாக ஸ்ரீ அழகிய சிங்கர் திருவாராதனத்தில் இருப்பதால் இருவரையும் குறித்தபடியுமாம். பேசி, உன்னி, வணங்கு என்பன—மொழி மனம் செயல்களால் என்பது. 'நேர்வணங்கு' என்பது ஸேவார்த்திகளாகிய நமக்கு இவ்விரு மூர்த்திகளும் அர்ச்சையாக ஸேவை தருகிறார்கள் என்பதைக் குறிக்கும். ஸ்ரீ அழகியசிங்கருக்கு விபவமாகவே ஸேவை ஸாதித்து அவர் புரியும் திருவாராதனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்றபடி. 'தேசிசைந்த' என்பது, தேஜஸ்ஸுகள் எல்லாம் தமக்கு ஸ்வாமியே உயர்ந்த ஆச்ரயம் என்று ஸ்வாமியைத் தேடி அவை அடைந்தன வென்பது. 'சீர் அரங்க மாற யோகி' என்பது, ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன். மாசில் நின்று-குற்றத்திலிருந்து; நாம நீங்கும் நாள்-நமக்குப் புண்ணிய வசத்தால் வாய்க்கும் தினத்தில்; மனத்தில் வைத்து வாழ்வம்-எல்லா ச்ரேயஸ்ஸுகளையும் அடைந்து இஹபர ஸுகங்களைப் பெறுவோம் என்பது. 'மாசி நின்று நீங்கு நாள்-இவ்விழா நடக்கும் நாள் மாசி மீ 30-ம் உ என்பதையும் இது குறிப்பிடும். அன்று ஒரே தினம் மட்டும் மாசி மாதம் இருந்து, மறுநாள் நீங்கிப் பங்குனி மாதம் வந்துவிடுகிறது. அதனால் நம் கொண்டாட்ட நாள் மாசி நின்று நீங்கும் நாளாதலால், அன்று ஒரு தினம் மட்டும் மனத்தில் வைத்தாலும் அந்த மாதம் நீங்குவதோடு நம் வினைகளெல்லாம் நீங்குவன என்றபடியுமாம். சிலேடைப் பொருளில் ன, ந, எழுத்துக்களைப் பேதமின்றி யமைப்பது பழந்தமிழ் மரபு. நாம—என்றது, ப்ரஸித்தி யென்னும் பொருளில் வடமொழி மரபிலுள்ள ப்ரயோகம். ஸ்ரீ அழகியசிங்கர் திருவடி பலத்தால் இப்பாடல் தோன்றிற்றென்றே நினைக்கிறேன். விழாக்கள் நடந்தேறவேண்டும்.” தாஸன்.

189258

'முக்கோற் பகவர்' எனும் நனனூற் றிருவிழா மாலை 4-5க்குத் தொடங்க, காரிய தரிசி நூலின் முகவுரையையும், வெளியீட்டின் பெரும் பகுதிகளையும் வாசித்தார். அப்பேரவையில், ஸ்ரீ அழகிய சிங்கர் எழுபதாண்டு நிறைவு நன்னாளாகிய தையொரு திங்கள் பதினைந்தாந் தேதி (28—1—1949) வெள்ளிக்கிழமை திரு உத்திராடத் திருநாளன்று திருவெவ்வுளூரில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிவாரத்தில் 'முக்கோற் பகவர்' கையெழுத்துப் பிரதி காணிக்கையாக இடப்பெற்றது. அது பிறகு அச்சிடப்பெற்று ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிவாரத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டது.

பின்னர் ஸ்ரீ உப. மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. குடவாசல் நரஸிம்ஹாசாரிய ஸ்வாமியும், ஸ்ரீ. உப. ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமியும் முறையே 'சிங்கப்பெருமான் பெருமை', 'ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம்' என்ற விஷயங்களைப் பற்றி வெகு அழகாக உபந்யாஸம் செய்தார்கள். தலைவர் முற்றுரை வழங்க, காரியதரிசி நன்றி கூற, விழா எட்டு மணிக்கு இனிது நிறைவெய்தியது.

*　　*　　*　　*

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் வர்ஷாராதநம்

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபகாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய 41-வது வர்ஷாராதநம், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி விசேஷண விசிஷ்டராய் எழுந்தருளியிருக்கும் தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனால் ப்ரதி ஸம்வத்ஸரம் நடத்தப்பட்டு வரும் முறையில், இந்த ஸம்வத்ஸரம் திருவையாற்றுக் கடுத்த கல்யாணபுரம் ஸ்ரீக்ராமத்தில் சித்திரை மீ' 6உ திங்கட்கிழமை காலையில் திவ்ய ப்ரபந்த வேத பாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு, சித்திரை மீ' 8உ புதன்கிழமை ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுருவப் படம்-பாதுகா வீதி உத்ஸவம், சாத்துமறை, பாதுகா தீர்த்தம் முதலியவைகளுடன் மஹோத்ஸவம் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஸ்ரீ ஹரசாப ஹரன் முதலிய எம்பெருமான்களின் ப்ரஸாதங்கள் அருளிப்பாடுகளுடன் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. பின்னர் கைங்கர்யத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனைகளும், அநந்தரம் ததீயாராதநமும் நடந்தேறின. கல்யாணபுரம் அக்ரஹாரிகர்களும், இவ்வுத்ஸவத்துக் கென்று பல விடங்களிலிருந்து எழுந்தருளியிருந்த மற்றும் பல ஸ்ரீ வைஷ்ணவர்களும், ஐகமத்யத்துடன் இம் மஹோத்ஸவத்தை இனிது நடப்பித்து ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவருளுக்குப் பாத்ரமானார்கள்.

R. வீராஸாமி ஐயங்கார்

*　　*　　*　　*

ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, மாதுங்கா, பம்பாய்

ஸர்வதாரி ஸூ. தைமீ' 22உ (4—2—49) வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ. உப. ஸர் S. வரதாசார்ய ஸ்வாமி, ஷை ஸபையின் சார்பில் 'தர்மமும் திநஸரியும்' என்ற விஷயத்தைப் பற்றி வெகு அழகாக உபந்யஸித்தார். தைமீ'. 28உ (10—2—49) வியாழக்கிழமை முதல், மூன்று நாட்கள், ஸ்ரீ. உப. கூரம் G. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி. முறையே 'ஸ்ரீ கூரத்தாழ்வான்', 'எம்பெருமானார்', 'ஸ்ரீமத் ராமாயணம்' என்னும் இவைகளைப் பற்றித் தாம் செய்தருளிய சில கவந ச்லோகங்களைப் படித்து அவற்றின் பொருளை விஸ்தரித்து பேசினார்.

R. ரகுநாத பாட்டராசார்யர்

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீராம க்ரது

இக்கலியிலும் ஆங்காங்கு சிற்சில தர்ம கார்யங்கள் நடைபெற்று வருகின்றன. சென்ற ஸ்ரீராம நவமியை முன்னிட்டு 'ஸ்ரீராம க்ரது' என்னும் ஒரு க்ரது விஶேஷத்தை, மதராஸ் ஸ்ரீ சென்ன கேஶவப் பெருமாள் ஸந்நிதியில், உத்தர தேஶ வாஸியான ஸ்ரீமான் நாராயணசார்யர் என்னும் ஒரு தார்மிகர், அநேக தநிகர்களுடைய ஸஹாயத்தைக் கொண்டு நடத்தி வைத்தார். நூற்றெட்டு ஸ்ரீ வைஷ்ணவ வித்வான்களை யஜமாநர்களாக வரித்து, அவர்களைக்கொண்டு ஸ்ரீமத் ராமாயணத்தைப் பாராயணம் செய்வித்தும், அம்மாதிரியே ஸ்ரீமத் பாரதம், ஸ்ரீ விஷ்ணு புராணம், ஸ்ரீமத் பாகவதம், திவ்ய ப்ரபந்தம் முதலிய பாராயணார்ஹ க்ரந்தங்களையும் பாராயணம் செய்வித்தும், எல்லாவற்றையும் ஒன்பது திநங்களில் பூர்த்தி செய்வித்தார். இவற்றுள் ஸ்ரீமத் ராமாயண பாராயணமே ப்ரதாநமாக அங்கீகரிக்கப்பட்டது. அதற்கு மாத்ரம் 108 திருநாமங்கள் வரிக்கப்பட்டார்கள்; மற்றவைகளுக்கு யதாலாபம் ஸ்வாமிகள் எழுந்தருளப்பண்ணப்பட்டார்கள். ப்ரதிதிநம் பாராயணிகள் காலையில் உபக்ரமித்து மத்யாந்ஹம் சாத்துமறை நடைபெறும். சற்றேறக்குறைய இருநூறு திருநாமங்கள், காலை மாலை இரு வேளைகளிலும், (இவ்வுத்ஸவத்துக் கென்றே வாங்கப்பட்டு) மஞ்சளில் நனைத்த யௌத வஸ்த்ரங்களை அணிந்துகொண்டு த்வாதஶோர்த்வ புண்ட்ரத்துடன், உச்ச ஸ்வரத்தில் க்ரந்தங்களை ஸேவித்து வருவதைக் கேட்க, ஸ்ரீ வைகுண்டத்தில் நித்ய ஸூரிகள் பகவத் கைங்கர்யத்தைச் செய்துவருவதுபோலவே தோன்றிற்று. வரிக்கப்பட்ட ஸ்வாமிகளுக்கு ஸகலவித உபசாரங்களும் எவ்வித குறைவுமின்றிக்கே செய்யப்பட்டன. ஸ்வாமிகள் அநேகமாக உத்தர தேஶத்திலிருந்தே எழுந்தருளியிருந்தார்கள். அத்ரத்யர்களும் விம்ஶதி (20) திருநாமங்கள் எழுந்தருளியிருந்தார்களென்று அறிகிறோம். கடைசி திநத்தன்று எல்லாருக்கும் உசிதமான ஸம்பாவனைகளும் நடந்தன. அவரவர்கள் சாத்திக்கொண்டிருந்த திருப்பரியட்டம், அவரவர்கள் ஸேவித்த க்ரந்தம், ஆகிய இவைகள் அவரவர்க்கே ஸமர்ப்பிக்கப்பட்டன. இதைத் தவிர்த்து ஒவ்வொருவருக்கும் மதாமதிகளுக் குரிய ரயில் சார்ஜும், ஸம்பாவனையாக ரூ. 25-ம் கொடுக்கப்பட்டன வென்று அறிகிறோம்.

* * * *

கொஞ்ச காலத்திற்கு முன் ஸம்ஸ்க்ருத பாஷையின் நிந்தையே காதில் பட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது ஸ்வல்ப காலமாக அதன் ப்ரஶம்ஸை நாலு பக்கங்களிலு மிருந்து வீசுகிறது. இந்த ப்ரஶம்ஸை ஸாமாந்ய வ்யக்திகளிட மிருந்து வரும் பக்ஷத்தில், அதை நாம் குணவத்தாகப் பாராட்டமாட்டோம். லௌகிக வ்யவஹாரங்களில் தேர்ந்தவர்களும், தேஶ வ்ருத்தாந்தங்களை நன்றாக அறிந்தவர்களும், ராஜ்ய நிர்வாஹத்தில் உயர்ந்த பதவியைப் பெற்றிருப்பவர்களும், ஸ்வலாபத்தைத் தூர த்யஜித்தவர்களு மான அநேக பெரியோர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையின் மஹிமையைப் பற்றி ச்லாகித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களுள் ஸமீபத்தில், இந்திய ப்ரதம மந்த்ரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, இந்திய தேஶ பாஷை சர்ச்சை விஷயமாக எழுதி யுள்ள வ்யாஸத்தில், ஸமஸ்க்ருத பாஷையைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கி றார் :—“இந்தியாவின் மஹார்க்கமான தாயதநமாக இருக்கும் சொத்து எது?’ என்று என்னை யாராவது கேட்டால், ‘ஸம்ஸ்க்ருத பாஷையும் அதில் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களுமே’ என்று நான் தழதழப் பிராமற் சொல்வேன். இதுதான் நமக்குப் பித்ரார்ஜிதமான சொத்து. இதை நாம் ஆதரித்துப் பரிபாலித்துவரும் பர்யந்தம், நம்முடைய மநோபாவங்கள் நல்வழியிலேயே செல்லும்; நம்முடைய புத்தி கௌஶலமும் குறைவு பெறாது நிற்கும். இது மிகப் புராதநமான பாஷை. இதை மேல் மேல் அபிவ்ருத்தமாம்படி செய்ய நான் விரும்புகிறேன். இந்தப் பாஷையில் ரஹஸ்யமாகக் கிடக்கும் அத்யுதாரமான விசாரங்க ளெல்லாவற்றையும் வெளிப்படுத்துவதே நம்முடைய பண்டிதர்களின் முக்ய கார்யமாக இருத்தல் வேண்டும். பாஷா விஷயத்தில் தேஶீய வாதம் கூடாது. ஒரு பாஷை அபிவ்ருத்தி யடைவதும் அடையாமற் போவதும், சட்டங்கள் செய்வதாலோ தீர்மாநங்கள் நிறைவேற்றுவதாலோ ஏற்படமாட்டா. அந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ள விஷயங்களின் பெருமையையும் உபயோகத்தையும் வெளிப்படுத்தி, இன்னும் மேற்கொண்டு அதே கம்பீரமான ரீதியில் விஷய சர்ச்சையை அந்தப் பாஷையிலேயே தெளிவாக எல்லாருக்கும் விளங்கும்படி வ்யாஸங்களை எழுதுவதுமே.”—இது ஸம்ஸ்க்ருத பாஷையைப்பற்றி ஸ்ரீ நேருஜீ கொண்டுள்ள அபிப்ராயம். இந்த அபிப்ராயத்துக்கு ப்ரத்யக்ஷ லக்ஷம் கொடுக்கலா மன்றோ?

ஸம்ஸ்க்ருத பாஷையின் பெருமை

* * * * *

ராஜாங்கத்தில் அதிகாரத்தை வஹித்துவரும் நமது ஸுஹ்ருத்துக்கள் நமது பண்டைக் காலத்து ஆசாரங்களில் பல சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார்கள். விவாஹ விஷயத்தைப் பற்றியது அவைகளுள் முக்யமாகக் காணப்படுகிறது. ஏற்கெனவே ‘சாரதா’ என்னும் சீர்த்திருத்தக்காரர், விவாஹார்ஹமான வயஸ்ஸானது ஸ்த்ரீகளுக்கு 14-க்குக் குறையாமலும், புமான்களுக்கு 18-க்குக் குறையாமலும் இருக்கவேண்டுமென்று ஒரு சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இப்பொழுது ஹிந்து கோட் திருத்த மசோதா ஸம்பத்தர்களான சில பெரியோர்கள், ‘14—18’ வயஸ்ஸுக்களை ‘15—20’ வயஸ்ஸுக்களாக மாற்றவேண்டுமென்று ப்ரயத்நப்பட்டார்கள்.

விவாஹ வயஸ்ஸின் மாறுதல்

ஏதோ ஒரு ஸங்கடத்தை உத்தேசித்து, சட்ட ஸபையார் அதை அவர்களுடைய இஷ்டப்படி ஒத்துக்கொள்ளாமல் '15—18' என்று மாற்றியிருப்பதாக அறிகிறோம். அதாவது: புமான்களுக்கு முன்போலவே 18-வயஸ்ஸுக்குப் பிறகே விவாஹம் செய்யலாமென்பதும், ஸ்த்ரீகள் விஷயத்தில் மாத்ரம் 14-க்குப் பதிலாக 15-வயஸ் எல்லையாக இருக்கவேண்டுமென்பதும் புதிய நியமமென்று ஏற்படுகிறது. இந்த நியமத்தை மீறினால், கட்டாயம் சிறைத் தண்டனை விதிக்கப்படுமாம். ஏற்கெனவே ஸ்த்ரீகளுக்கு விதிக்கப்பட்டிருந்த 14-வயஸ் என்னும் நியமம் ஜனங்களுக்கு என்ன ஆநுகூல்யத்தைச் செய்ததோ அறியோம். அந்தச் சட்டத்தை மீறிக் கணக்கற்ற விவாஹங்கள் நடந்தன. ராஜாங்கத்தார், அப்படி மீறினவர் விஷயத்தில், அதைப் பார்த்ததும் பாராததாகவும் இருந்துவந்தார்கள். இந்தப் புதிய நியமத்திலும் அப்படியே இருப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

* * * * * *

ஆசார்ய ப்ரதிபத்தி

ஆசார்யர்களுக்கு அஸாதாரணமான ஓர் உந்நத பதவியைக் கொடுப்பதும், நல்லதற்கோ பொல்லாததற்கோ அந்த ஆசார்யர்களிடத்தில் அவிசாரிதமான ப்ரத்யயத்தை வைப்பதும், நமது மதங்களின் விசேஷித்த ஆகாரமாகத் தென்படுகின்றன. இந்த மநோபாவம் ஸமீப காலத்தில் உண்டானதென்று சொல்ல முடியாது. சாந்தோக்ய உபநிஷத்தில், '𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾 𑌸𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌤𑍍' [ஆசார்யனிடமிருந்து க்ரஹிக்கப்பட்ட வித்யையே உத்தமமான பலத்தைக் கொடுக்கும்] என்றும், கடோபநிஷத்தில்,

"𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾 𑌗𑍌𑌰𑍌 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌕𑌥𑌿𑌤𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥"

[எவன் தைவத்தினிடத்தில் அதிமாத்ரமான பக்தியைச் செய்கிறானோ, அதேமாதிரியான பக்தியைத் தனது குருவினிடத்திலும் செய்கிறானோ, அவனுக்கேதான் உபதேசிக்கப்படும் அர்த்தங்கள் ப்ரகாசிக்கும்] என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. பகவத் கீதையில் 13-வது அத்யாயத்தில், மோக்ஷத்தை விரும்பும் பக்தனுக்கு ஆசார்ய பூஜை ஒரு அவச்யாபேக்ஷிதமான அங்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புராணங்களிலும் இந்தத் தத்வம், உபபந்நங்களான உபாக்யாநங்கள் த்வாரா வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. மஹா பாரதத்தில் காணப்படும் ஏகலவ்யோபாக்யாநம் இதற்கு மிகவும் ஸங்கதம். இவை எல்லாவற்றையும் பார்த்தால், நமது பெரியோர்கள் ஒரு வித்யார்த்தியின் யோக்யதையை நிர்ணயிக்கும் காலத்தில், அந்த வித்யார்த்தியின் உத்யோகத்தையும் புத்தி கௌசலத்தையும் பராமர்சித்துப் பார்ப்பதுபோல, 'எந்த ஆசார்யரிடம் வித்யாக்ரஹணம் செய்திருக்கிறார்? நல்ல சிக்ஷை ஆகியிருக்கிறதா?' என்பதைக் கவனிப்பார்கள். நம்மால் பரிகணிதர்களென்று கொண்டாடப்பட்டுவரும் பெரிய ஆசார்யர்கள்கூட சில காரணங்களாலே தாமே அறிந்து சொல்லுமவற்றையும்,

"𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑍇𑌤𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌹𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌯𑍋𑌗𑌂 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌥𑌯𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥"

[இந்த ரஹஸ்யத்தை நான் வ்யாஸ பகவானுடைய அநுக்ரஹத்தால் ஸாக்ஷாத் க்ருஷ்ண பகவான் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே கேட்டிருக்கிறேன்] என்கிறபடியே 'ஸதாசார்ய ப்ரஸாத மடியாக இவ்வர்த்த மறிந்தேன் ; என் கைம் மிடுக்காலே யறிந்து சொல்லுகிறே னல்லேன்' என்று இவ்வுண்மையை வெளியிட்டுக்கொண்டு சொல்வார்கள். 'உபநிஷத்' என்னும் பதத்திற்கு 'ரஹஸ்யம்' என்பது பொருள். அதை மஹத்தான ஸமீக்ஷையோடேயே ஆசார்யர்கள் ஶிஷ்யர்களுக்கு உபதேஶிப்பார்கள். 'ஜ்ஞாநத்தைப் பிறர்க்கு உபதேஶிப்பதில் ஆசார்யர்களுக்கு இவ்வளவு இஷ்டக் குறைவு இருக்கலாமோ? அஜ்ஞாநிகளுடைய அஜ்ஞாநத்தைப் போக்கி, ஜகத்தில் எல்லாரும் ஜ்ஞாநிகளாகப் போகும்படி செய்வதன்ரோ உதாரர்களா யிருக்கும் ஆசார்யர்களுடைய லக்ஷணமாக இருத்தல் வேண்டும்? 'ஐஹு ம யதெ௩ ஹெரவயெஜ' [ரஹஸ்யமான மந்த்ரத்தை மஹத்தான யத்நத்தைச் செய்து ஸம்ரக்ஷிக்கவேண்டும்.] என்பது சரியான உபதேஶமாகுமா ?' என்று நமக்குத் தோன்றலாம்.

இப்படி நமது பெரியோர்கள் செய்ததற்கு ஒரு காரண முண்டு. உபதேஶிக்கப்படப்போகும் மந்த்ரம் ஸாதாரண விஷயங்களைப் பற்றிய தன்று. அதை யதாவத்தாக க்ரஹித்து, அதை ஸத்விநியோகப் படுத்தும்படியான திறமையும் மநோபாவமும் அந்த ஶிஷ்யர்களிடம் இருக்கின்றனவா வென்பதை நன்ருக அறிந்துகொண்ட பிறகே ஆசார்யர்கள் அதை வெளியிடத் துணிவார்கள். அதற்காகவே ஶிஷ்யர்களை ஒரு வர்ஷமாவது கூட வைத்துக்கொள்வார்கள். அவர்களுடைய புத்திஶாலித்தனம், ஸாத்விகமான மநோபாவம், நன்னடத்தை, இவைகளை நன்ருக உணரவேண்டு மென்றே ஆசார்யர்கள் வித்யார்த்திகளைக் காக்க வைக்கிருர்களே யொழிய, அஸூயா காரணமாக அவர்களைக் காக்க வைக்கவில்லை. வேதாந்த விஷயங்களில் சில பாகங்கள் சிலருக்கு எளிதில் தெளிவாக விளங்கும்; மற்றும் சிலருக்கு அவை ஏ௱வஹா ஹமாகவே நிற்கும். லௌகிக விஷயங்களிற் கூட இம்மாதிரி விபாகங்கள் உண்டு. நிற்க : மந்த்ரங்களை க்ரஹித்த பிறகு தமது ஜந்மாந்தர வாஸனையடியாக, அந்த ஶிஷ்யர்கள் அவைகளைத் துர்விநியோகப் படுத்திவிட்டால், அதனல் ஜகத்துக்கே கணக்கற்ற தீமைகள் விளைந்து, அது ஜநங்களுடைய நாஶத்துக்குக் காரணமாகும். அம்மாதிரி விபத்துக்கள் வாராமல் ஜகத்தை ஸம்ரக்ஷிப்பதும் ஸதாசார்யர்களுடைய தர்ம மாகையால், ஶிஷ்யர்கள் வித்யார்த்திகளாக வரும் பக்ஷத்தில் அவர்களை முதல் முதலில் பரீக்ஷித்துப் பார்க்க வேண்டியது அவச்ய மாகின்றது. இதை உத்தேஶித்தே ஸதாசார்ய உபஸதநம் செய்தே அவர்களிடமிருந்து வித்யையை க்ரஹிக்கவேண்டு மென்று பெரியோர்கள் நியமித்திருக்கிருர்கள். மேலும்: உபதேசிக்கப்பட்ட வித்யை பலிப்பதற்குப் பெரியோர்களுடைய அநுக்ரஹமும் வேண்டும்.

'கூஉவயா நிஸுவ ரஹெர வஜெகஃ' [ஆசார்யர்கள் ப்ரீதியுடன் உபதேசித்தல் வேண்டும்] என்று ஒரு நியமம் உண்டு. நாம் அத்ருஷ்ட பலத்தில் விச்வஸிப்பவர்கள். 'இது இவனுக்குப் பலிக்கவேண்டும்' என்ற ஹார்த்தமான மநோபாவத்துடன் ஆசார்யன் மந்த்ரோபதேஶம் செய்தால் அந்த உபதேஶத்தின் பலம் வேறு ; கேவலம் ஸ்வலாபத்தை உத்தேசித்து உபதேசிக்கும் பக்ஷத்தில் அதன் பலம் வேறுதான்.

189258

ஸ்ரீ:

சென்னை ஹிந்துமத பரிபாலந மசோதா விஷயமாகத் தேரழுந்தூர் ஸ்ரீ ஸஹஸ்ரநாம ஸபைத் தலைவர் ஸ்ரீ. T. S. ஸௌந்தரமையங்கார் B.A. L.T. செய்துகொள்ளும் அறிக்கை.

அநேக மடங்களின் வ்யவஹாரங்கள் ந்யாயமான ரீதியில் ஒழுங்காய் நடத்தப்படுவதில்லை யென்றும், அதனால் மசோதாவை அமூலுக்குக் கொண்டுவருவதே சரியான முறை யென்றும், அதை அமூல் செய்யத் தடைபண்ண முடியாதென்றும், மசோதாவை அமூலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் பொது ஜனங்களால் தகுந்த தடை ஏற்பட்டால் அப்போது அது விஷயமாக யோசிக்கப்படு மென்றும் கனம் உணவு மந்திரி பத்ரிகாசிரியர்களைச் சந்தித்தபோது பேசினார். அநேக மடங்கள் ஒழுங்கீனமான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன வென்றால், சில மடங்கள் ஒழுங்காக நடத்தப்பட்டு வருகின்றன வென்பது இவர் கூற்றிலிருந்தே புலனாகின்றது. ஒழுங்காய் நடத்தப்பட்டு வரும் மடங்களைப் பின்பற்றி, மற்றை மடங்களை நடத்த அரசாங்கத்தார் போதிப்பதற்கு ஏன் ஒரு நிர்ப்பந்தம் செய்யக்கூடாது? இதனால், நன்றாய்ப் பரிபாலநம் பண்ணப்பட்டு வரும் மடங்களும் நாசத்துக் குள்ளாகலாமா? மசோதாவைச் சட்டமாக்கும் விஷயத்தில் ஸர்க்காரைத் தடுக்க முடியாதென்றும், அது ஒரு கக்ஷியினர் உத்தர வென்றும் சொல்லப்படுகிறது. சக்தியில்லாத கக்ஷியினிடமிருந்து எப்படித் தடை செய்ய முடியும்? இந்த அதிகாரமானது, சட்ட ஸபையில், மெஜாரிடி அங்கத்தினர்கள் இருக்கும்படியான காங்க்ரெஸ் கக்ஷியினர் கையில் இருக்கிறது. அதிகாரம், கக்ஷி, அபிப்ராயபேதம், ஆகிய இவை யதேச்சாபிப்ராய முள்ள ஸாக்காருடைய சரக்குகள். இப்போது ஜநநாயக ஸர்க்காரில் மேற்சொன்ன கக்ஷியில் நம்மை அடிமையாக்கக் கூடாது. ஷை மசோதாவைச் சட்டம் பண்ணும் விஷயத்தில் பொதுமக்களிட மிருந்தும், முக்யமாய்க் காங்க்ரெஸ் பார்ட்டியிலிருந்தும், இன்னும் நம் நாட்டில் திறமை வாய்ந்த சில வக்கீல்கள் ஜட்ஜ்கள் இவர்களிடமிருந்தும், மிகச் சிறிய ஆக்ஷேபங்கள் வந்தால்கூட ஜநநாயக ஸர்க்கார் இந்த ஆக்ஷேப விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டியது அவர்களுடைய கடமை. கனம் மந்திரி யவர்கள் அதிகமான ஆக்ஷேபங்கள் இருந்தால் யோசிக்கப்படு மென்று ஏன் சொல்லவேண்டும்? ஷை சட்டம், மத விஷயமான மடங்கள் ஆலயங்கள் ஆகிய இவைகளைப் பாதிக்கும்படியாய்க் கொண்டுவரப்படும்போது, ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்கப் போதுமான ஸந்தர்ப்பங்கள், ஸௌகர்யங்கள், காலதவணை இவைகளை அளிக்கவேண்டியது ஸர்க்காருடைய கடமை யல்லவா? ஸர்க்கார், இப்பொழுது ஷை மசோதாவைச் சட்ட மாக்கும் காலத்தை ஒதுக்கிவைத்து, பொது ஜனங்களுடைய அபிப்ராயத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டு நன்மை செய்தால், அரசாங்கம் ஜனங்களுடைய நல்லபிப்ராயத்துக்குப் பாத்ரமாகும்.

* * * * *

ஸ்ரீ அஹோபில மடத்தின் சார்பில், ஆசார்ய பீடாதிபதி ஸ்ரீ ராகவாசார்ய ஸ்வாமி, [ஸம்பாதகர் 'ஹிந்தி ந்ருஸிம்ஹ ப்ரியா', குன்வார்ப்பூர், பெரில்லி, யு. பி.] டெல்லியில் நடந்த அகில இந்திய ஹிந்து மதத் தொகுதி மசோதா எதிர்ப்பியக்கத்தில் கலந்துகொண்டு ஷை ஹிந்து மதத் தொகுப்புச் சட்டத்தைக் கண்டித்தார். அவருடைய ப்ரஸங்கத்தில், புராதந ஹிந்து மத நாகரிகத்தைக் காப்பாற்றவேண்டிய ஆவச்யகத்தையும், இப்பொழுது கொண்டுவரும் மசோதா நிறைவேற்றப்பட்டால், அது ஹிந்து ஸமூஹத்தையே அழித்துவிடு மென்றும் நிரூபித்துக் காட்டினார். இந்த மஹாஸங்கம் 1949 மார்ச் மீ². 2-ம் தேதியிலிருந்து 6-ம் தேதி வரை கூடி, ஹிந்து மதத் தொகுப்புச் சட்டத்தைக் கண்டித்து ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியது.

Regd. M. 4437.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ நருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ. 10.

ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ நருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.